1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 39-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## சண்டைப்பீதியா? சமாதானபீதியா?

தற்சமயம சோவியற் ருஷியாவுக்குச் சமாதானத்தின்மேல் ஆவலாம்; சமாதான மகாநாடுகளைக் கூட்டுகிறது; சமாதானத்தைப்பற்றி எங்கும்பேச்சு. ஆனால், செயலில் சண்டையைத் தூண்டுவதாக வதந்தி. இதில் எதுஉண்மை? மலங்காடுகளில் எருமைகள் ஆளைக்கண்டால் பயந்து பாயவரும. ஒருசிறுகம்பை நீட்டினால் அல்லது ஒருகல்லை எடுத்தால் ஓட்டம். காரணம் என்ன? பயம். மனிதன்பெரியவன், நம்மை என்னசெய்துவிடுவானோ என்றபீதியினால் குத்த வருவதுபோல் காட்சி. அதேபோலக் கம்யூனிஸ்த ருஷியாவுக்கும் "மற்றநாடுகள் எங்கே தற்சமயம் சண்டைதொடுத்துவிடுகின்றனவோ; நம்பாடு ஆபத்தாய்முடியுமோ" என்றபீதி. இந்தப்பீதியினால் தான்சண்டைக்குத் தயாராக இருந்து கிளம்புவது போலப் பாசாங்கு. இதில் அதற்கு முழுவெற்றி என்றேசொல்லலாம். அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய் என்றாற்போல, மற்ற நாடுகளும் ருஷியாவைக்கண்டு பயப்படுகின்றன. சோவியற் அரசின் சமாதானப் பேச்சு எந்தமட்டும்? கலகமும்சண்டையும்தானே கம்யூனிஸ்தின் ஒரே நோக்கம். சண்டையிட்டுக் கலகத்தைமூட்டி உலக முழுவதையுமே கைப்பற்றுவது தான் அதன் திட்டம், நோக்கம், ஆவல். சூழ்நிலை சரியாகஇல்லையே என்ற தயக்கம். பயப்பீதியினால் இன்னும்சிறிதுகாலத்திற்குச் சண்டைஇருக்கக் கூடாதென்றஆவலை—பரோபகார சிந்தையால் சமாதானத்தை விரும்புகிறோம்என்றபேர்வாங்க இந்தச்சமாதான கபடநாடகம். இருதலைக்கொள்ளி எறும்புபோல் விழிப்பு.

எந்தச் சூழ்நிலையினால் உடனடியாகச் சண்டைதொடங்கச் சோவியற்அரசுஅஞ்சுகிறது?

### ஆயுதப் பெருக்கம் போதாதா?

சனநாயகநாடுகளான பிரித்தானியும், அமெரிக்காவும் 2-வது யுத்தம்முடிந்து அசந்துபோயிருந்தன. அச்சமயம் கப்பல்களையும், விமானங்களையும் ருஷியாபெருக்கியது. எத்தனை ஆயிரக்கணக்கான கடல்மூழ்கிக் கப்பல்கள், பெரியபெரியதாங்கிகள்; யுத்தத்திற்கேற்ற விமானங்கள். எத்தனை ஆயிரம்; இவ்வளவும் அதன்வசம் இருக்கின்றன. 2-வது யுத்தம் முடியும்சமயம் இங்கு மூன்றுநாளும், அங்கு நான்குநாளும் சண்டைசெய்து, சமாதானம்ஆனவுடனே, அந்நாடுகளிலிருந்து எத்தனையோ ஆயுத தளவாடங்களை அபகரித்துவைத்திருக்கின்றது. சில நாளைக்குமுன் ஒரு அமெரிக்க நிபுணரின் மதிப்புஎன்னவென்றால், அமெரிக்கரைவிட ருஷியா தான் அதிக ஆகாயப்படை வைத்திருக்கிறது என்பதே. அமெரிக்காவின் அணுக்குண்டுக்கு ருஷியா அஞ்சுகிறதா? அணுக்குண்டின் அபாயம் சொல்லளவில்தான் பிரமாதம். செயல்முறையில் அவ்வளவுபெரிதல்லவென்று சில விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். எவ்வளவு அணுக்குண்டுகள் அமெரிக்காவில் உள்ளனவோ அவ்வளவுஅணுக்குண்டுகள் சோவியற்ருஷியாவிலும் உண்டென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்

— ஜெயம்ஜீ —

கள். பெருத்தசேனையும் ருஷியாவில்உண்டு, அத்தோடு அதன் அடிமைநாடுகள் ஒவ்வொன்றிலும் பெரும் பெருஞ்சேனைகளைப் பழக்கிவைத்திருக்கின்றது. பின்னர்ஏன் ருஷியா சண்டைக்கு அஞ்சுகிறது? போனஆண்டில் ஐக்கிய நாடுகளின் சேனைத் தலைவரான, ஐசனோவரின் கீழிருந்த சேனை ருஷியாவின்சேனையிலே ஐந்தில் ஒருபாகம் முதலாய்இல்லை.

### நீருக்கும் நுரையுண்டு

பெரும்சேனையுண்டு. அவைகளை நடத்துவதற்குத் திறமை வாய்ந்த தலைவர்கள்வேண்டுமே — அவர்கள் தானே இல்லை. பொறுக்கி எடுத்த படைவீரர் கொஞ்சம், காலாட்படைமிச்சம். றெயில்போக்குவரத்து வசதி சிறிது; யுத்ததளவாடங்களைப் பெருக்கிக்கொண்டே போனதினால் உணவுச்சேகரம் கொஞ்சம்; சேனையானது வயிற்றில் ஊர்ந்து போகிறதுஎன்று சொன்னவர் வாய்க்குச் சர்க்கரை; சரியான உணவுப் பெருக்கமில்லாமல் சேனைஎப்படிச் சண்டையிடும்? ருஷியாவின் பலவீனம் வேறொன்று என்னவெனில், யூகோசிலேவியா கம்யூனிஸத்தையும், அதன்சர்வாதிகாரி ரிற்றோவையும் வெறுக்கிறது. ரிற்றோ ஸ்ராலினை வெறுக்கிறான். மக்கள் ரிற்றோவை வெறுத்தாலும் அவன் ஸ்ராலினைஎதிர்த்து நிற்பானேயாகில் திரண்டுசென்று ருஷியாவின் கதவுகளையே நொருக்கித்தள்ளத் தயார்.

### ஹங்கேரியும் கம்யூனிஸமும்

கம்யூனிஸப்பேயை ஹங்கேரியில் ருஷியர் அவிழ்த்துவிட்டனர். ஹங்கேரிய நாட்டினரை வதைத்தனர். இதைத் தாங்கிக் கொண்டார்கள்; அவர்களைத் தாழ்த்தினர். அதை அவர்களால் தாங்கமுடியவில்லை. கருதினால் மின்சென்ரி ஆண்டவருக்குச் செய்தஅவமானம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## குடும்ப செபமாலை

மலர்மாலை மனதுக்கு இரம்மியமளிக்கிறது, சுகந்த மணம் வீசி உள்ளத்தைக் குதூகலிக்கச் செய்கிறது, உண்மைத்தான். சிறிதுநேரத்துள் அதே மலர்மாலை வாடிவதங்கி உதிர்ந்துவிடுகிறது. ஆனால், மரியன்னை மனிதகுலத்திற்குத் தந்த செபமாலை எனும் மலர்மாலை என்றுமே வாடாதபொன்மாலை. இம்மாலையைத் தொடுத்து, இறைவனின் பங்கயமலரடிக்குச் சாற்றுகிறவர், ஒவ்வொருசணமும் பேரின்பத்தின்வாயிலை நெருங்கிச் செல்கின்றனர்என்று நிச்சயமாகக் கூறலாம். பக்திஎனும் நறுமலர்களைக் கொண்டு, விசுவாசம் எனும்நாரினால் தொடுக்கப்பட்ட மலர்மாலைதான் செபமாலை. எனவேதான் அர்ச். சாமிநாதர் செபமாலை செபிப்பதைவிடச் சிறந்தபக்திமுயற்சி வேறொன்றுமில்லைஎன்று கூறுகிறார்.

குடும்பசெபமாலை சொல்வது பழங்காலந்தொட்டு இருந்துவரும் ஒருநற்பழக்கம். இச்சீரிய பழக்கத்தைத் தரித்திரரும் — தனவந்தரும், பண்டிதரும்—பாமரரும், சிறியோரும்— பெரியோரும் மேற்கொண்டு, அடைந்த அருட்கொடைகளும், அனுகூலங்களும் அனந்தம்என்பது அசைக்கமுடியாதஉண்மை. உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞானியான மார்க்கோனிபிரபு ஒரு செபமாலைப் பக்தர்என்று சரித்திரவாயிலாக அறிகிறோம். அவருடையதிருமணத் தினத்தன்று மங்கலவாழ்த்து நல்கிய பதினோராம்பத்திநாதபாப்பானவர், ஒருசெபமாலையைப் பரிசாக அளித்து, "நீங்கள்இருவரும் ஒன்றுசேர்ந்து செபமாலை சொல்லுங்கள். எப்பொழுதாவது நீங்கள்இருவரும் பிரியும்படி நேர்ந்தாலும், ஒருவரையொருவர்நினைத்துச் செபமாலை சொல்லுங்கள்" என்று செப்பினர். பாப்பரசர் படிப்பித்த இந்தப்பக்திமுயற்சியை, மார்க்கோனிபிரபு தனதுகடைசிமூச்சுவரை கடைப்பிடித்தார். அவர் மரணப்படுக்கையிலிருக்கையில், இறுதியாகக்கூறிய மொழிகள்: "நான் கடைசிமூச்சுவிடும்வரை செபமாலை என்கையில் இருந்ததுஎன்று என்மனைவியாருக்குத்தெரியப்படுத்துங்கள்" என்பதே. இச்சம்பவம், குடும்பசெபமாலை தேவநேசத்தைஎழுப்பி, ஆத்துமபண்பைப் பெருக்குவதோடு, குடும்பஐக்கியத்தையும் வளர்க்கிறதென்பதைத் தெற்றெனத் தெரிவிக்கிறது.

வண. C. A.
அந்தோனிச் சுவாமிகள்

குடும்பசெபமாலை, குடும்பத்தின் தனிஅழகாகும். குடும்பத்திற்கு இறைவனின் ஆசியும், அருளும் அடையச்செய்வது செபமாலை. குடும்பத்தில் சமாதானம்ஏற்படவும், சாந்திநிலைக்கவும், சந்தோஷம் பெருகவுஞ் செய்யுஞ் சிறந்தசாதனம் செபமாலைதான். முச்சத்துருக்களின் போராட்டத்தினின்று காப்பாற்றி, ஆத்துமசரீர அபாயங்களை அகற்றி, பிணிகளைப் போக்கி, பாவிகளை மனந்திருப்பி, நெறிதவறியோரை நல்வழிப்படுத்தும் அரியஆயுதம் செபமாலையே. எனவே, ஒவ்வொருகத்தோலிக்க குடும்பமும் தினமும் குடும்ப செபமாலை செபிக்கும்வழக்கத்தைக் கடைப்பிடித்தல் மிகநல்லது.

"சர்வவரப்பிரசாதப் பொக்கிஷம் செபமாலை" — 5-ம் சின்னப்பபாப்பானவர்.

"நீங்கள் செபமாலைசெபித்துக்கொண்டு எங்குசென்றாலும் எதற்கும் பயப்படத்தேவையில்லை." — வண. லாமி (பரீஸ் நகர் அப்போஸ்தலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## கமக்காரருக்கு நற்செய்தி

— வாஷிங்ரன்

மரக்கறி, பழச்செடிகளையும், கீரை வகைகளையும் நாசம் செய்கிறவைகளிலே குறைந்தபட்சம் நான்குமாதிரிப் பூச்சிகளை அழிக்கும் பூச்சிகொல்லி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க கமத்தொழிற்பகுதி அறிவிக்கிறது. லே குங் தேங்எனும் சீனச் செடியின் வேர்ப்பட்டையிலிருந்து இந்தப்பூச்சிகொல்லி தயாரிக்கப்பட்டிருக்கிறது. முதன்முதலாவதாக இந்தச்சீனச்செடியானது 1936-ம்ஆண்டு அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்டது. சீனர்கள் இதைத்தூளாக உபயோகித்துப் பயிர்ச்செய்கையிலே நல்ல வெற்றி கண்டுள்ளனர். இன்னும் ஆராய்ச்சி நிலையில் உள்ளபோதிலும், இந்தப் பூச்சிகொல்லி பயிர்பச்சைகளின் சிறப்பானசத்துருவாக விளங்குமென்று நம்பிக்கையாகச் சொல்லப்படுகிறது.

## முறைக்காய்ச்சலுக்கு மருந்து

— வாஷிங்ரன்

அத்திசுரம், முறைக்காய்ச்சல் முதலியநோய்களைத் தொற்றச்செய்கிறவை மனிதசரீரத்தில் உண்டாகின்ற ஒரு வகைப்பூச்சிகளாகும். இந்தப்பூச்சிகளைக் கொல்லும் மருந்தொன்றும் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைஅமெரிக்க தற்காப்புப்பகுதி அறிவிக்கிறது. வைத்தியத்துறையில் இந்தப்புதுமையைத் தற்காப்புப்பகுதி அறிவிக்கக்காரணம், கோறியாவில் இந்தப்பூச்சிகொல்லி வெற்றிகரமாகக் கையாளப்பட்டிருப்பதுதான். ஐ. நா. படையினர் தங்கள்சரீரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதினால் இந்தப் பூச்சிகளுக்கு அவர்கள் பயப்படவேண்டியதில்லை. ஆனால், கைதிகளாகியுள்ள கம்யூனிஸ்த போர்வீரர்களும், வட கோறியசனங்களும் இந்தப் பூச்சிகளாலே வருந்துவதினால் புதியதடுப்பு மருந்தைப் பாவிக்கவேண்டி வந்தது. ஐ. நா. படையினருக்கும் ஒருகால் தேவைப்படின் அப்போதைக்கு இம் மருந்து உபயோகிக்கப்படும்.

## மழையே மழையே வா வா

தலைப்பைப் பார்த்தால் மயிலே மயிலே இறகுபோடு என்றவசனம் நினைவுக்குவரலாம். இங்குகுறிப்பிடுவது மயிலைப்பற்றியல்ல, முகிலைப்பற்றி. அமெரிக்காவில் செயற்கைமழை தருவிக்கும்முறை ஆராயப்படுகிறது. இந்தியாவில் டக்றர் எஸ். கே. பானர்ஜீ அவர்கள் மழையே மழையே வா வா என்று வானத்துமுகில்களை வசியம் பண்ணி வருகிறார். கல்கத்தாவுக்கு அருகேயுள்ள ஜாதவ்பூரில் இவர்செய்கின்ற ஆராய்ச்சியானது குறைந்த செலவில் செயற்கைமழை பொழியச் செய்யும் சிறந்தமுறையைத் தோற்றுவிக்கலாம். இவருக்கு இந்தப்'பித்து' வெகுநாட்களாகஉண்டு. இந்தியாவின் வானிலைஆராய்ச்சி நிலையங்களின் பிரதம நிர்வாகியாக இருக்கும்போதும் இவர் விமானங்களில் சவாரிசெய்து மேகங்களைத் தூரத்திக்கொண்டு திரிந்தவர். இவரது முயற்சியின்பயனாக இரண்டுதடவை மழையும்பெய்துள்ளது. ஆகாயவிமானத்தில் மிகஉயரக் கிளம்பி மேகத்தின்மீது கரியமிலவாயு அல்லது "சில்வர்அயோடைட்"பொடியைத் தூவிப் பெய்யாதமழையைப் பெய்யவைத்திருக்கிறார்.

## யாருக்குப் பொறுப்பாளி ?

சட்டப்படி அமெரிக்க ஜனாதிபதி எந்தஒரு தனிஆளுக்காவது, அல்லது உத்தியோககுழுவிற்காவது பொறுப்பாளிஅல்லர். அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். எனவே, அவர்தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கே பொறுப்பாளிஆவார். ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரம் அமெரிக்ககாங்கிரஸுக்கு (சட்டசபை) அமைந்ததாகிறது. காங்கிரஸ் விருப்பத்தின்பிரகாரமே அவர் பணம்செலவழிக்கலாம். காங்கிரசைக்கேளாமல் அவர் சட்டம் போடமுடியாது. உயர்தரஉத்தியோகங்கள் பலவற்றிற்கு அவர்செய்கின்ற நியமனங்களும், அவர்செய்யும் உடன்படிக்கைகளும் செனற்சபையால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

நீதிப்பகுதியில் அவர்செய்யும் நியமனங்களைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ள வேண்டும். அவற்றை மறுப்பதற்குக் காங்கிரஸுக்கு அதிகாரம் உண்டு. ஜனாதிபதி விலக்குவதைக் காங்கிரஸ் மாற்றிவிடமுடியும். அவர் செய்வனயாவற்றையும் காங்கிரஸ் ஆராய்ந்து பார்க்கமுடியும். ஜனாதிபதியே அமெரிக்கபடைகளுக்கு மாபெரும்தளபதி. ஆனாலும் போர்தொடுக்கக் காங்கிரஸுக்குமட்டுமே அதிகாரம் உண்டென்று அரசியல்சட்டம் வரையறுத்துள்ளது. சனப்பிரதிநிதிகள்சபையில் மூன்றில்இருபங்கினர் வாக்களித்தால் மட்டுமே ஜனாதிபதிமீது குற்றஞ்சாட்டி அவரைப்பதவியிலிருந்து விலக்கலாம். ஜனாதிபதி, உபஜனாதிபதி அரசாங்க உத்தியோகஸ்தர் ஆகியோர் அரசாங்க துரோகம், லஞ்சம், வேறுபெருங் குற்றங்கள், தவறானசெயல்கள் ஆகியவற்றுக்காக விசாரிக்கப்பெற்றுத் தண்டிக்கப்பட்டால் அவர்களைப் பதவியிலிருந்து விலக்கவேண்டும்என்று அரசியல்சட்டம் சொல்லுகிறது.

## ஜனாதிபதித் தேர்தல்

— வாஷிங்ரன்

கார்த்திகைத்தேர்தலுக்கு இன்னும் நான்குவாரங்கள் இருக்கின்றன. தேர்தல்நடவடிக்கைகளைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்:

(1) கவர்னர் ஸ்ரீவன்சனுக்கும், ஜெனறல் ஐஸன் ஹோவருக்கும் போட்டி பலமாகஇருக்கிறது. இப்போதே முன்கூட்டி முடிவைச்சொல்ல இயலாது.

(2) இவ்வருடத்தில் வாக்காளராகப் பதிவுசெய்திருப்போரின்தொகை பெருவாரியாக இருக்கிறது. நிலைமையை வரையறுத்துச்சொல்ல இயலாதவகையிலே தேர்தல் இயக்கம் நடக்கிறது. முடிவில் தற்சமயம் "மௌனமாக"இருக்கின்ற வாக்குகளே வரப்போகும்நிர்வாகப்பொறுப்பை யார்ஏற்கப்போகிறார்கள் என்பதைத் தீர்மானிப்பதாகஇருக்கலாம்.

(3) வாக்காளரின் அபிப்பிராயம் தெளிவாகஉருவடைவதற்கு இன்னும் ஒருமாதம் பிடிக்கும். அதுஎவ்வாறாயினும் வாக்குகளை எண்ணி முடிவு சொல்வதற்குமுன் எதுவும்சந்தேகமாக இருக்கமுடியுமேதவிர வேறல்ல.

தேர்தலுக்குமுந்திய கடைசிமாதம் இதுவே. இம்மாதம் முழுவதும் அபேட்சகர்கள்இருவரும் தேசம்முழுவதும் சுற்றுப்பிரயாணஞ்செய்து தேர்தற்பிரசாரம் தீவிரமாகநடத்தத் திட்டம்போட்டிருக்கின்றனர். ஜனாதிபதி ட்றூமன் அவர்களும் ஜனநாயக கட்சியின்சார்பில் நாடெங்கணும் தேர்தற்பிரசாரம் தொடங்கியிருக்கிறார். இவரதுசுற்றுப்பிரயாணம் முக்கியமாகக் கமப்பண்ணைப் பிரதேசங்களில் நடக்கிறது. காரணம், ட்றூமனின்வெற்றிக்கு உதவியாகஇருந்தவை இந்தப் பண்ணைப்பிரதேசத்தவர்களின் வாக்குகளேயாகும்.

# சுதேச வர்த்தமானம்

## கொழும்பு–யாழ்ப்பாணத் தெரு

இலங்கையின் வடமேற்குக் கரைநீளம் தற்போது அமைக்கப்பட்டுவரும் புதிய தெருவானது புத்தளத்திலிருந்து மன்னார்வரையும், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்தையும் நேரே இணைப்பதாகும். இதனால் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமுள்ள பிரயாணதூரம் 25 மைல்வரையில் குறைந்துவிடும். கொழும்பிலிருந்து புத்தளம் வரையிலே கரைநீளம் ஏற்கனவே ஓர் தெரு இருந்துவருகிறது. புதியதெரு இதனைத்தொடர்ந்து பூநகரிவரையில் வந்துசேரும். பூநகரியிலிருந்து மோட்டர்படகுப் பாதைமூலம் யாழ்ப்பாணம் வந்துசேரலாம். கொழும்பிலிருந்து மன்னார் கரைப்பாதைவழியாக 158 மைல்தூரத்தில் உள்ளது. ஆனால் இப்போது கொழும்பிலிருந்து மன்னாருக்குவர அனுராசபுரம், மதவாச்சி கண்டுதான் பயணஞ் செய்யவேண்டும். இதற்கு 196 மைல்தூரம் கடக்கவேண்டும். புதியதெரு இப்பாதையின் தூரத்தை 38 மைலால் குறைத்துவிடும். அவ்வாறே மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகிறவர்களும் வவுனியாகண்டே வரவேண்டியிருக்கிறது. இப்பாதை 37 மைல் நீளமுள்ளது. ஆனால், மன்னாரிலிருந்து நேரே பூநகரிக்குவரும் தெருவின் நீளம் 76 மைல் மாத்திரமே. அதனால் இப்பாதைமூலம் 61 மைல் குறைகிறது. மன்னார்-யாழ்ப்பாணத் தெரு இன்னும் சில மாசங்களில் போக்குவரத்துக்குத் தயாராகுமென எதிர்பார்க்கப்படுகிறது. புத்தளம்–மன்னார்த் தெருவும் தீவிரமாக அமைக்கப்பட்டு வருகிறது. இப்புதியவீதி பிரயாணத்தைத் துரிதப்படுத்துவதுடன் அதன் இருமருங்குமுள்ள நிலங்கள் திருத்தப்பெற்றுச் சனங்கள் குடியேறவும் வசதியளிப்பதாகும்.

## கல்லூரியின் நன்கொடை

வெலிசறையிலுள்ள சயரோக ஆஸ்பத்திரியிலே சயரோகம்கொண்ட பிள்ளைகளின்வாட்டில் ஓர் படுக்கையை அமைப்பதற்கென யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரி 750 ரூபாவை நன்கொடையாக அளிக்கும் பொறுப்பை எடுத்திருக்கின்றது. சென்ற 4-ந்திகதி இலங்கைத் தேசீய சயரோகதடைச் சங்கத்தின் கிளைக் கூட்டத்திலே சம்பத்திரிசியார்கல்லூரி அதிபர் சுவாமியவர்கள் தலைமைதாங்கியபோது இதனைத் தெரிவித்தனர். இதையிட்டுச் சுகாதார உத்தியோகஸ்தர் டக்றர் பி. இராசசிங்கம் அவர்கள் கல்லூரி அதிபர் சுவாமிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

## 80,000 தொன் சீன அரிசி

சீன–இலங்கை வர்த்தக உடன்படிக்கைக்கும், 80,000 தொன் சீன அரிசியை இலங்கைக்கு விற்பனைசெய்தற்கான ஒப்பந்தத்துக்கும் சென்ற ஞாயிற்றுக்கிழமை பீக்கிங் நகரிலே கைச்சாத் திடப்பட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. சீனாவுக்கும், தென்கிழக்கு ஆசியாவிலுள்ள எந்த ஒரு நாட்டுக்குமிடையே நடைபெற்றிருக்கும் முதல் உடன்படிக்கை இதுவாகும். எண்பதினாயிரம்தொன் சீன அரிசியிலும் சுமார் 20,000 தொன் அரிசி இலங்கையின் அவசியதேவையைப் பூர்த்திசெய்வதற்காக இம்மாச நடுப்பகுதியிலே சீனாவிலிருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப் படவிருக்கிறது. அரிசிக்குக்கொடுபடும் பணத்தைச் சீனா இலங்கையிலிருந்து றப்பரையும், மற்றும் பிறபொருட்களையும் இஷ்டம்போல இறக்குமதிசெய்வதற்கும் பயன்படுத்திக்கொள்ளும். உடன்படிக்கைப்படி றப்பருக்கும் அரிசிக்கும் நியாயமான விலைவிகிதங்கள் விதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## சோமெற் விமானப்பிரயாணம்

பி. ஓ. ஏ. சி. கொமெற் விமானங்கள் பம்பாயிலிருந்து கொழும்புவந்துசேர மூன்று மணித்தியாலத்துக்குக் குறைந்தநேரமே செல்லுகின்றது. ஆனால், கொழும்பிலே அதில்வரும் பிரயாணிகளின் பயணச்சாமான்களைப் பரிசோதனைசெய்யக் கொழும்புவிமானத் துறையில் ஏறக்குறைய அதேநேரமே செல்லுகின்றது. இதற்குக்காரணம், பரிசோதனைசெய்ய இருஅதிகாரிகள் மாத்திரம் இருப்பதேயாகும். மணித்தியாலம் 500 மைல்வீதம் விமானங்களில் பறந்துவந்தும் அந்தந்த இடத்தைத் தாங்கள்போய்ச்சேர இவ்வளவு காலதாமதம் ஏற்படுமாயின் தங்கள் தீவிரபிரயாணத்தால் ஆகும்பயன் யாதென்று பிரயாணிகள் முறையிடு செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள்.

## பொலிஸ் றேடியோ ஸ்ரேஷன்கள்

இலங்கையிலே தற்போது பொலிஸ் பகுதி சங்கிலித்தொடர்போன்று 16 றேடியோ ஸ்ரேஷன்களைக் கொண்டிருக்கிறது. இவற்றிலே கொழும்புக்கு வெளியிலுள்ள பிரதான றேடியோ ஸ்ரேஷன்களுள் அதிகமானவை தலைமைஸ்ரேஷனுடன் அல்லது மாகாண ஸ்ரேஷனுடன் இணைந்திருப்பதாலே அவசியதேவைகளின் போது உதவி பெறக்கூடியதாய் இருக்கிறது. மட்டக்களப்பு, கண்டி, களுத்துறைதெற்கு, நுவரெலி, ஹோட்டன்பிறிட்ஜ், அனுராதபுரம், வதுளை, திரிகோணமலை, நீர்கொழும்பு, சிலாபம், இரத்தினபுரி, யாழ்ப்பாணம், குருநாகல், மாத்தறை, காலி, மன்னார் என்பனவே பொலிஸ்றேடியோ அமைந்துள்ள 16 ஸ்ரேஷன்களுமாகும்.

## பிறசமயத்தவரின் யாத்திரை

தேவத்தையிலுள்ள தேவதாயாரின் திருசேத்திரத்திற்குக் கத்தோலிக்கர் அல்லாதவர்களின் திருயாத்திரை சென்றபுரட்டாசிமாசம் 7-ந்திகதி நடைபெறலாயிற்று. கொள்ளுப்பிட்டி, மரியாயின்சேனையாராலே ஒழுங்குபடுத்தப்பட்ட கத்தோலிக்கர் அல்லாதாரின் ஆறாவது வருடாந்தயாத்திரை இதுவாகும். இம்முறை யாத்திரையிலே முஸ்லீம்களும், இந்துக்களும், புத்தர்களும், பல்வேறுசபைகளைச் சேர்ந்த புறொட்டஸ்தாந்தரும், கத்தோலிக்கருமாக 150 பேருக்குமேல் கலந்துகொண்டார்கள். இவர்களுடன் சென்ற வண. பி. தியோகுப்பிள்ளை சுவாமியவர்கள் நிறைவேற்றிய திவ்விய பூசைக்கு முந்தஎல்லோரும் சமுகமளித்தபின்னர் பலவிஷயங்களிலும் கலந்துகொண்டார்கள்.

## இரத்த உபகார வேண்டுகோள்

கொழும்புத்திட்டத்தின்கீழ் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் பிரித்தானிய மார்புநோய் வைத்திய நிபுணர்களின் கோஷ்டியானது கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரியிலே சென்றதிங்கட்கிழமை தனதுசிகிச்சை தொடக்கியிருக்கிறது. இவர்கள் ஆறுமாதகாலம் இங்கு தங்கியிருப்பார்கள். இவர்களாலே சத்திரவைத்தியம் செய்யப்படும் சயரோகிகளுக்கு இரத்த நன்கொடை அளிக்கும்படி தொண்டர்களை முன்வரும்படி கேட்டு இரத்த வங்கி அன்பர்கள் ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஒரு பெருந் தொகையான சயரோகிகள் சத்திர வைத்தியஞ் செய்யப்படவிருப்பதாலே பெரிய ஆஸ்பத்திரி இரத்தவங்கி அதிகாரிகள் இரத்தம் உபகரிக்க அதிகமான தொண்டர்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்திருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### கருதினல்மார் திருச்சங்கம்

எழுபதுபேர் இருக்கவேண்டிய கருதினல்மார் திருச்சங்கத்தில் தற்போது 23 ஸ்தானங்கள் காலியாயிருக்கின்றன. அது பூரணமாக அங்கத்தவரைக் கொண்டிருக்கச் செய்யுமாறு பரிசுத்தபாப்பரசர் கருதினல் பதவிக்குரியவர்களைத் தெரிவுசெய்து வருகிருரென ரோமை நகரிலிருந்து அறிவிக்கப்படுகிறது. ஆனல், இந்தவேளை அவர் காலியாயிருக்கும் சகல ஸ்தானங்களையும் நிரப்புவார் போல்இல்லை. ஏனெனில் அவற்றிற்சில இரும்புத்திரைக்குப் பின்னல் இருந்துவருகின்றன. அதனல் இந்தஸ்தானங்களில் இருந்துவரும் குருசிரேஷ்டர்களைக் கருதினல்மாராக்குவது இந்தவேளை வசிதிப்படமாட்டாது. தற்போதுள்ள 47 கருதினல்மாருள்ளும் 16 பேரே இத்தாலியர். ஆர்மா, பரீஸ், றுவோன், பேர்ளின், குவெபெக், போஸ்ரன், சென்லூயிஸ் என்பன கருதினல்மாரின்றியிருக்கும் சிலநகரங்களாகும். 12-ம்பத்திநாத பாப்பரசர் புதிய கருதினல்மாரை ஆக்குவதில் ஒருபோதுமே அவசரப்படுவோராயில்லை.

### நிதிமந்திரியின் காரியதரிசி

பரீஸ்நகரிலே நுவாலி லெசெக் எனும் தொழிலாளர் வகுப்புப் பட்டணப் புறப்பங்கின் புதிய விசாரணைக் குரவரான வண. பியேர் பெர்னே சுவாமியார் குருப்பட்டம் பெறுவதற்குமுன் ஐந்துவருடங்களாகப் பிரான்சியஅரசாங்க நிதிமந்திரியாரின் பிரதமகாரியதரிசியாய் இருந்துவந்தார். மந்திரியாரும் இவரது சொந்தத் தந்தையாரான எம். ஜோர்ஜெஸ் பெர்னே அவர்களே. தற்போது இவர் ஓர் செனற்றராய் இருக்கின்றார். 40 வயசுடையவரான சுவாமியார் குருவாகவந்தபின்னர் தொழிலாளர்களையே விசாரணைசெய்து வந்திருக்கின்றார். நுவாலி லெசெக் எனும் பட்டணப்புறமானது றெயில்வேத் தொழிற்சாலைகள், அணியிடும் நிலையங்களாற் பேர்போனது.

### குருவானவரின் அழியாச்சரீரம்

லெபனன்மலையிலே வனவாசியான ஓர் குருவானவராயிருந்து இற்றைக்கு 54 வருடங்களின் முன் மரணமடைந்த வண. ஷார்பெல் மைக்கிளல் சுவாமியாரின் அழியாச் சரீரதைத் தரிசித்து வணங்குவதற்காகச் சமீபத்திலே லெபனன்நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் அன்னுயாளனுமிடத்திற்போய்த் தேங்கியிருந்தார்கள். பெய்றாத் நகருக்குச் சமீபமான சைப்பிறஸ்மரச்சோலையில் அதனைத் திரும்பவும் அடக்கஞ்செய்யுமுன் இருவாரங்களாக அதுகாட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இருவாரங்களிலும் சமீபமைதானங்களிலும், திறந்தவெளிகளிலும் சுருட்டுப்புகைப்பது, ரேடியோ உட்படச்சங்கீதம் ஆதியனவெல்லாம் விலக்கப்பட்டிருந்தன. காலை 5 மணிமுதல் மதியம்வரையில் தொடர்பாகத் திவ்வியபூசைகள் நிறைவேறின. நோயாளரும், அவர் சலிகையால் பலவித சகாயங்கள் பெற்றவர்களும் அவர் மேனியைப் பிரத்தியேகமாகச்சந்திக்க ஒழுங்குசெய்யப்பட்டது. இப்பரிசுத்த குருவானவர் மரணமடைந்த அதேவருடத்தில்தானே அவர் கல்லறையைச் சூழவரப்பிரகாசம்தோன்றவே, கல்லறையைத் திறந்து பார்த்தபோது, சுவாமியாரின் சரீரம் அற்பமுமே அழியாதிருக்கக் கண்டறியப்பட்டது. 1950-ம் ஆண்டு கல்லறை திரும்பவும் திறக்கப்பட்டபோது, சரீரம் இன்னுமே அற்பமும் சிதையாதிருந்தது. அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கான விசாரணை ஏலவேதானே தொடக்கப்பட்டுள்ளது.

### மரியகோறெற்றியின் படங்கள்

1950-ம் ஆண்டின் பரிசுத்த வருடத்திலே அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்ற பன்னிரு வயசுடைய இத்தாலியபெண் மணியான அர்ச். மரியகொறெற்றியிலே மிகுந்தபக்திகொண்டவர்களாய் அமெரிக்கஐக்கிய தேச சின்சினத்திநகரில் சஞ்சரிக்கின்ற திரு. தோமஸ் டொனெல்லிஎன்பவரும், இவர்மனைவியும் சென்றவருடத்திலே ஒருலட்சத்துக்குமேற்பட்ட அவளுடையபடங்களைத் தபால்மூலம் பலருக்கும் அனுப்பிவைத்திருக்கிருர்கள். திரு. டொனெல்லி என்பவர் ஓர் விற்பனையாளர். இவர்தினமும் சாயந்தரவேளையிலே மணித்தியாலம் 1,500 படங்களுக்கு ஓர்விதபாதுகாப்புத் திராவக உறையிடுகின்ருர். இவர்மனைவி தனதுபிள்ளைகள் நால்வரையும் பராமரிப்பதுடன் பலரும்அனுப்பும் கடிதங்களுக்குப் பதிற்கடிதமும் அனுப்புகின்ருள். இந்தப்பதிற்கடிதத்திலே மரியகொறெற்றியின் தாயாரான சிஞ்ஞோரா அசுந்தாவிடமிருந்து கிடைத்தகடிதம் ஒன்றும் அடங்கியிருக்கிறது. சிஞ்ஞோரா அசுந்தா இவளுக்குத் தனதுமகளின் திருப்பண்டம் ஒன்று அனுப்பிவைத்துள்ளாள். நிற்க, திருமதி டொனெல்லியின் தந்தையாரான திரு. ஜோர்ஜ் மெய்னேர்ஸ் அவர்கள் பத்துவருடகாலத்திலே திரு இருதயஆண்டவரினது எழுபதுலட்சம் விருதுகளை ஓர்மின்சார அச்சியந்திரங்கொண்டுசெய்து பலருக்கும் வழங்கிப் பெயர்பெற்றிருக்கின்ருர்.

### பாப்பரசரும் மாஜிகம்யூனிஸ்தரும்

"டெய்லி வோக்கர்" என்ற கம்யூனிஸ்த பத்திரிகையின் செய்திஆசிரியராக முன்னர் இருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கரான திரு. டக்ளஸ் ஹைட் அவர்கள் சமீபத்திலே காஸ்ரெல்கான்டெல்போ மாளிகையில் பாப்ப[illegible] போது, பரிசுத்தபிதாவுடன் இவர் 15 நிமிஷநேரம் சம்பாஷித்து, "கம்யூனிசத்துக்குப் பதில்", "நான்விசுவசித்தேன்" என்ற தமதுபுத்தகங்களின் மொழிபெயர்ப்புகளை அவருக்கு அன்பளிப்புச்செய்தனர். இந்தப்புத்தகங்கள் அநேகபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. குருடர்களுக்கென்று "பிறெய்லி" எழுத்திலும் அச்சிடப்பட்டுள்ளன. அப்போது இவர் ஓர் புறொட்டஸ்தாந்தராய் இருந்தபோது வேதசாஸ்திரங் கற்றுப் 18-ம் வயதிலே ஓர் புறொட்டஸ்தாந்த மிஷனரியாக இந்தியாவுக்குப்புறப்பட ஆயத்தமாயிருந்தபோது, அதற்குப் பதில் ஓர்கம்யூனிஸ்தராயினர்.

### மனந்திரும்பிய பாதிரியார்

இங்கிலாந்திலே ஸ்ரோறிங்ரன் எனுமிடத்தில் மறுபடியும் திறக்கப்பெற்ற நோர்பேர்த்தினிய ஆச்சிரமத்தில் சமீபத்திலே நவசந்நியாசஉடை தரித்துக்கொண்ட நால்வருள் புறொட்டஸ்தாந்த பாதிரியாராயிருந்து மனந்திரும்பிய பிறதர் எமில் பாண்ஸ்அவர்களும் ஒருவராவர். இவர் 1941-ம்ஆண்டு புரட்டாசி மாதம் அங்கிளிக்கன்சபையில் குருப்பட்டம்பெற்றுச் சிலவருடகாலம் பிறென்வூட்நகரிலுள்ள கன்ரர்பறி அர்ச். தொமாஸின் கோவில் விசாரணைப்பாதிரியாராய் இருந்தார். அங்கு இருக்கும்போதே இவர்மனந்திரும்பி 19[illegible]-ம் ஆண்டு கத்தோலிக்க திருமறையில் சேர்ந்துகொண்டார். பின்னர் மான்செஸ்றரிலே சுற்றத்தவர்ஒருவருடன் தங்கியிருக்கும்போது நோர்பேர்த்தினியசபையில் சேர்ந்துகொள்ளத்தீர்மானித்தார்.

—தமது சிம்மாசனத்தைத்துறந்த எகிப்திய மாஜிபாரூக்மன்னர் தற்போது இத்தாலியிலே காப்ரிஎனும் தீவில் வசிக்கின்ருர். இவர் ரோமை நகரிலேயே நிரந்தரமாகவசிக்கத் திட்டஞ்செய்துள்ளாரென்று செய்தி கிடைத்திருக்கிறது. ரோமைநகரின் சுற்றுப்புறம்ஒன்றிலே அவருக்கென்று ஓர்மனையை வாங்குதற்கான முயற்சி நடைபெறுகின்றது.

## அர்ச். மரிய கொறெற்றியின் படம்

இரத்தம் வடித்த லீலி எனப்படும் அர்ச். மரியகொறெற்றியின் அழகான படங்கள் விற்பனைக்கு இருக்கின்றன.

பெரியஅளவு: 12" × 8½"
ஒன்று 75 சதம்

சிறியஅளவு: 4" × 2½"
விலை: 100-க்கு ரூபா 7-00

தபாற்கூலி 30 சதம்.

கிடைக்குமிடம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## உள்ளமெனுந் தோட்டம்

1. ஒப்பில் லாத பரம்பொருளே
உள்ள மென்னும் தோட்டமதைத்
தப்பில் லாமல் எமக்களித்த
தயவைப் போற்றி வளர்ப்போமே

2. பற்றித் துட்ட விலங்குகள்தான்
பாய்ந்து விழுந்தே அழிக்காமற்
சுற்றி உறுதி யென்னுமொரு
சுகிர்த வேலி அடைப்போமே

3. நன்றும் தீதும் உணர்ந்தபெரு
ஞான முதல்வன் நமக்களித்த
என்றும் அழியா உண்மையெனும்
இனிய விதையை விதைப்போமே

4. நட்புப் பகைகள் கருதாது
நடுவு நீதி எனுமரிய
பெட்பார் ஆணி வேர்வீழ்த்துப்
பேணி இனிது வளர்ப்போமே

5. பொய்யா மேகம் வரையாது
பொழிந்தே யருளும் மாரியினும்
மெய்யாய் இனிய அன்பென்னும்
வியன்நீர் பாய்ச்சி வளர்ப்போமே

6. பொல்லாக் கரவு சூதுமனம்
புழுங்கிப் புரியும் அநீதியெனும்
எல்லாக் களையும் இனிதகற்றி
என்றும் பேணிக் காப்போமே

7. தானம் இனிய செபதபங்கள்
சாந்தம் பொறுமை கீழ்ப்படிவு
ஞானம் பக்தி முதலாய
நன்மா மலர்கள் பறிப்போமே

8. தின்மை மறந்தும் கருதாது
தேடித் தேடி யாவருக்கும்
நன்மை யென்னும் நறுங்கனிகள்
நாளும் ஆய்ந்து கொடுப்போமே

9. உள்ளத் தோட்டம் பழுதடைந்தே
உலரா வண்ணம் இறைவனருள்
வெள்ளம் பரந்து பாயநிதம்
வேண்டி வளர்த்து வருவோமே

"ஞானி",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

### ஐப்பசிமாதம் — 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 10 | அ. பிரான்சீஸ்கு போர்சியார் | (வெ) |
| சனி | 11 | தேவதாயரின் மாதா மகிமைத் திருநாள் | (வெ) |
| ஞா. | 12 | இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 19-ம் ஞாயிறு — அ. வல்பிறித் தப்பர் | (ப) |
| திங் | 13 | அ. எட்வாட் | (வெ) |
| செ | 14 | அ. கல்லிஸ்தார் | (சி) |
| புத | 15 | அ. அவிலா தெரேசம்மாள் | (வெ) |
| வி | 16 | அ. எட்வீசம்மாள் | (வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1952-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 9-ந் திகதி


## மிஷன் ஞாயிறு

“மிஷன்ஞாயிறு” என அறியப்படுகின்ற விசுவாசப் பரப்புதல்ஞாயிறு இம்மாசம் 19-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வருகின்றது. அன்றுதினம் நமது பரிசுத்தமாதாவாகிய திருச்சபை உலகமுழுவதும் கிறீஸ்துநாதரின் இராச்சியம் பரம்பும்படியாகப் பக்திவேகத்துடன் செபஞ்செய்ய வேண்டுமென்றும், உதாரசிந்தையுடன் தருமம் வழங்கி உதவிசெய்ய வேண்டுமென்றும் தனது ஞானமக்கள் சகலரையும் ஆர்வத்துடன் அழைக்கின்றது.

வேதத்தைப்பரப்பக் கத்தோலிக்கமக்கள் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றனரா? ஆம். தேவனிற்கொண்டுள்ள நேசமானது அவ்வாறு செய்யும்படி அவர்களைக் கடமைப்படுத்துகின்றது. மெய்யங் கடவுளாகிய அவரைப் பலகோடிக்கணக்கான மக்கள் நேசிப்பதற்கும், நேசித்து வழிபடுவதற்கும்பதில் அவரை இன்னுமே அறியாமலும், அலட்சியஞ்செய்தும், அவமதித்தும் வரக் காணும்போது, அவரை மெய்யாகவே நேசிக்கும் எவர்தான் மெய்யாகவே கவலைகொள்ளாதிருப்பர்? அதனுல் அவர்கள் வேதத்தைப்பரப்ப எடுத்துக்கொள்ளும் முயற்சியானது அவர்களின் தேவநேசத்தைப் பரீட்சித்தறியும் உரைகல்லாகும். இன்னும் நமதுஅயலார் மட்டில் காண்பிக்கவேண்டிய பிறர்சிநேகக்கடமையும் இதனை அவர்களுக்கு வற்புறுத்துகின்றது. ஆகவே, நமது பிறசமய சகோதரர்களை இரட்சணியத்தினதும், பேரின்பபாக்கியத்தினதும் பாதையில் வழிநடத்துவது நம்மேற்சுமந்த பாரமான கடமையாகும். மனிதவர்க்கத்தை மனந்திருப்புவதாகிய மாபெரும் பணியானது கத்தோலிக்கர் அனைவரதும் ஒத்துழைப்பிலேயே தேங்கியிருக்கின்றது.

கத்தோலிக்கதிருச்சபை சகல நாடுகளிலும் வேதம்போதித்துச் சனங்களை மனந்திருப்ப வேண்டியது ஏன்? “ஆகையால் நீங்கள்போய்ச் சகலசாதிசனங்களுக்கும் உபதேசித்து, அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள்” என்று திருவாய்மலர்ந்தருளிய தெய்வீகஸ்தாபகரின் மகத்தான செய்தியைக் கடைப்பிடித்தொழுக வேண்டியிருப்பதாலேயாகும். அவ்வாறுயின் நாம் கத்தோலிக்க மிஷன்களுக்கு உதவி செய்வதுஎவ்வாறு? எல்லாத்துக்கும் முன் நாம் “மிஷன் ஞாயி”றை மனப்பூர்வமாக ஆதரிக்க வேண்டும். ஒவ்வோர்நாட்டிலும் வேதப்பரப்புதலுக்கென்று மனேற்சாகமாக வேலைசெய்யுமாறு கத்தோலிக்கமக்களை ஒரே பந்துக்கட்டாகத் திரட்டும் நாள் இதுவாகும். பாப்பரசரே இதனை அணிவகுத்து நிர்வகித்து வருகின்றார். ஆகவே, கிறீஸ்துநாதரது பதிலாளியின் விருப்பை நிறைவேற்றுவதில் நாம் அலட்சியஞ் செய்யப்படாது. தேவனுடைய இராச்சியத்தைப் பரப்புவதாகிய மகத்தான தொண்டுக்கென அர்ப்பணஞ்செய்யப்பெற்றுள்ள இந்தமகாதினத்தில் நாமெல்லாம் இந்தச்சுகிர்த நோக்கம் கைகூடும்படியாக மிகுந்தபக்திவேகத்துடன் செபஞ்செய்தும், மனத்தாராளமாகத் தர்மஞ்செய்தும் வேதப் பரப்புதலிலே நமக்குள்ள மேலானவாஞ்சையைப் பகிரங்கமாகக் காண்பிப்போமாக!

நாம் ஒவ்வொருவரும் மிஷன் நாடுகளின் நிரந்தரபரோபகாரிகளாய் இருக்க விரும்பினுல், அதற்கு ஓர் சுலபமானவழி விசுவாசப்பரப்புதற்சபையில் சேர்ந்துகொள்வதேயாகும். ஏனெனில், இந்தச்சபையானது புதிய கோவில்கள், புதியபாடசாலைகளைக்கட்டியும், தருமசாலைகள், வைத்தியசாலைகளை ஸ்தாபித்தும் மனந்திருப்புதல்வேலையில் ஈடுபட்டிருக்கின்ற மிஷனரிமாருக்கெல்லாம் இடையருமலே உதவிசெய்துவருகின்றது. கத்தோலிக்கமிஷன்கள் சராசரிவீதமாக வருடம்ஒன்றுக்கு ஐந்துலட்சம்பேரை மனந்திருப்பித் திருச்சபைக்குக் கொடுக்கின்றன. ஆதலால், கத்தோலிக்கமிஷன்களுக்கு நம்மாலான உதவிகளைச்செய்து தேவதோத்திரத்துக்கும், மனிதவர்க்கத்தின் ஆன்மசரீர நன்மைக்குமாக இயன்றகரிசனை எடுப்போமாக!

## விசுவாசப்பரப்புதல் ஞாயிறுக்குமுன் நவநாள்

### 1952 ஐப்பசி 11-ந் திகதியிலிருந்து 19-ந் திகதிவரை

1. நவநாட்செபம் தினந்தோறும் சொல்லுங்கள் (11-ம் பத்திநாதர் செய்தது.)

2. கூடுமான இடங்களில் பலவகைப்பட்ட சபையார்எல்லோரும் ஒவ்வொருநாளும் பூசைகண்டு, நற்கருணைவாங்கலாம்.

3. இவ்வருஷத்து மிஷன்ஞாயிறு அழைத்தலுக்கிசைய மிஷன்நாடுகளின் அபிவிர்த்திச்சேவைக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

**18,000 பலிபூசைகளில் பங்கு பெறவேண்டுமா?**

இத்தனை பூசைப்பலன்கள் உங்களுக்கு வேண்டுமாகில்

**விசுவாசப் பரப்புதல்சபையிற் சேர்ந்து**

பரோபகார சிந்தையோடும் தாராள மனதோடும்
சர்வேசுரன்போல் உங்களால்இயன்ற
தர்மம் செய்வீர்களாக.

(1) செபம்: தினம் ஒருபர. ஒருபிரி. “அர்ச். சவேரியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்; குழந்தையேசுவின் அர்ச். தெரேசம்மாளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்” என்று செபிக்கவும்.

(2) தியாகம்: வருஷாவருஷம் ரூபா 1—8—0 கொடுக்கவும்.

வண. ஜீ வி. ஐ. சாமா சுவாமியார், யே. ச.,
அகில கீழ்த்திசைச் செயலாளர்,
தபால்பெட்டி 69, மதுரை.

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 19-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 22: 1—14)

அக்காலத்தில் யேசுநாதர் மறுமொழியாகப் பிரதான ஆசாரியருக்கும் பரிசேயருக்கும் உவமைகளால் வசனித்துத் திருவுளம்பற்றினதாவது: பரலோக இராச்சியமானது தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்வித்த ஓர் இராசனுக்கொப்பாயிருக்கின்றது. அவன் தன் ஊழியர்களை அனுப்பிக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டவர்களைக் கூப்பிட்டான். ஆனுல், வருவதற்கு அவர்களுக்கு மனமில்லாமற்போயிற்று. மறுபடியும் அவன் வேறே ஊழியர்களை அனுப்பி: இதோ! என் விருந்தை ஆயத்தப்படுத்தேன். என் எருதுகளும், கொழுக்கவளர்ந்த மிருகங்களும் அடிக்கப்பட்டன; எல்லாம்முஸ்திப்பாயிற்று; கலியாணத்துக்கு வாருங்களென்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்றுன். ஆனுல், அவர்கள் அசட்டைசெய்து, ஒருவன் தன் வயல்நில வீட்டுக்கும், வேறொருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்களோ அவனுடைய ஊழியர்களைப் பிடித்து அவமானப்படுத்திக் கொலைசெய்தார்கள். அரசனுனவெனில் அதைக் கேட்டபோது சினந்து தனது சேனைகளை அனுப்பி அந்தக் கொலைப்பாதகர்களைச் சங்கரித்தான். அவர்களுடைய பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்போது அவன் தன் பணிவிடைக்காரரை நோக்கிச் சொல்லுவான்: கலியாண விருந்து முஸ்திப்பாயிற்றே; ஆனுல், அழைக்கப்பட்டவர்கள் அதற்கு அபாத்திரவான்கள் ஆனுர்கள். ஆதலால், நீங்கள் வழிச்சந்திகளிற்போய், உங்களுக்குத் தென்படும் யாவரையும் கலியாணத்துக்கு வரவழையுங்களென்றுன். அப்படியே பணிவிடைக்காரர் வீதிகளிற் புறப்பட்டுப்போய்க் கண்ட நல்லவர்கள் தீயவர்கள் யாவரையுங் கூட்டிவந்தார்கள். கலியாணச் சாலையும் பந்தியமர்ந்தவர்களால் நிறைந்தது. அப்படியிருக்க, அரசன் விருந்தினரைப்பார்க்க உள்ளே பிரவேசித்துக் கலியாண வஸ்திரம் அணியாத ஓர் மனிதனை அங்கேகண்டு: சிநேகிதனே! கலியாண ஆடையில்லாமல் நீ இங்கே எப்படிப் பிரவேசித்தாய்? என்று அவனைக் கேட்டான். அவனே மௌனமாயிருந்தான். அப்போது அரசன் பணிவிடைக்காரர்களை நோக்கி: இவனுடைய கைகால்களைக் கட்டிப் புறம்பேயுள்ள இருளில் அவனைத் தள்ளுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்புமிருக்கும்என்றுன். அவ்விதமே அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பபேர் என்றுர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சுதேச வர்த்தமானம்

### தங்கயூபிலிவிழா

இலங்கைக் கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் ஐம்பதாம்வருடத் தங்கயூபிலிவிழா நிகழும் ஐப்பசிமாதம் 9-ந்திகதியாகிய இன்றுதினம் கொண்டாடப்பட வேண்டியதாகும். ஆனுல், கோவைத் திருயாத்திரையை முன்னிட்டுப் பின்போடப்பட்டிருக்கும் இந்தவிழாக் கொண்டாட்டத்தை அடுத்துநிகழும் 1953-ம்ஆண்டு மாசிமாதம் ஓர் பெரிய கத்தோலிக்க சமாகமத்துடன் கொண்டாடுவதென அச்சங்கத்தின் மத்திய சபைகூடித் தீர்மானித்திருக்கிறது.

நல்லூர்மீசாம் உதவிக்குரவரான வண. எல். அந்தோனிப்பிள்ளை சுவாமியவர்கள், சென்ற 7-10-52 செவ்வாய்க்கிழமை காலஞ்சென்ற தமது அருமைத் தாயாரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்ருடிக்கொள்ளுமாறு வண. சகோதர குருப்பிரசாதிகளையும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரையும், மற்றும் அன்பர்கள் அனைவரையும் பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றுர்.

### தேர்தல்மனு விசாரணை

பாராளுமன்றத்திலே ஹக்மனைப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பெற்ற திரு. எஸ். ஏ. தர்மபாலாவின் தேர்தல் முறை கேடானதென ஆட்சேபித்துத் திரு. எம். ஜே. அபெவர்த்தனஎன்பவர் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்துள்ள மனு வருகிறகார்த்திகைமாதம் 10-ந்திகதி சங். சுவான் நீதியாசரால் விசாரணைசெய்யப்படவிருக்கிறது. ஒழுங்குமுறைப்படி பிணைப்பணம் கட்டப்படாமையாலே சனப்பிரதிநிதிகள்சபையின் சபாநாயகரான திரு. அல்பேட் பீரிஸ் அவர்களின் தேர்தலைஆட்சேபித்துச் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவிஷயமாய் யாதாமோர் நடவடிக்கையும் எடுக்கப்படாதென்று கேட்டுச் செய்யப்பட்டுள்ள மனுவும் வருகிற கார்த்திகைமாதம் 5-ந்திகதி சங். சுவான் நீதியாசராலேயே விசாரணை செய்யப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்சலில் எறிவெடிக்குண்டு

தபாற்பார்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட்ட ஓர் "வெடிகுண்டு" சென்றவெள்ளிக்கிழமை வியாங்கொடை றெயில்வேஸ்ரேஷனில் வெடித்தமையாலே அதனைக்கொண்டு சென்ற தபாற்சேவகன் கடூரகாயமடைந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டான். இந்த "வெடிகுண்டு"ப் பார்சல் வியாங்கொடைத் தபாற்கந்தோரிலே ஒப்புவிக்கப்பட்டது. அதனை ஒப்படைத்தவன் இன்னுமே கண்டறியப்படவில்லை. இந்தப்பார்சல் ஏனையதபால்களுடன் கொழும்புக்கு அனுப்பப்படுமாறு வியாங்கொடை ஸ்ரேஷனுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தபாற்சேவகன் தபாற்பையைத் தூக்கிப்போட்டதும் அக்குண்டு வெடிக்கலாயிற்று. வேறும் நான்கு பார்சல்களும், சிலகடிதங்களும் எரிந்துபோயிருக்கக் காணப்பட்டன.

## ஒல்லாந்தரும் கத்தோலிக்கசமயமும்

ஒல்லாந்தரது ஆட்சிகாலத்திலே இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் சரித்திரநூல் ஒன்றை எழுதும் நோக்கமாக ஓர் பெல்ஜிய குருவரும், அமலோற்பவமரியநாயகிசபையைச் சேர்ந்தவருமான வண. றுபிறெச்ள் பூடென்ஸ் சுவாமியார் சமீபத்திலே கொழும்புவந்து சேர்ந்திருக்கின்றார். தற்போது இவர் நுவரெலியிலுள்ள அரசாங்கசாசனசாலையிலே தாம்எழுதவிருக்கும் நூலுக்குவேண்டிய விஷயங்களைச் சேகரிப்பதிலே தினமும்எட்டு மணிநேரம் வேலைசெய்து வருகின்றார். அங்கே இவர் பழையசாசனங்களை ஆராய்ச்சிசெய்து கவர்ச்சிகரமான அநேககாரியங்களைக் கண்டுபிடித்திருக்கின்றார். அதனால் அக்காலத்திலே கத்தோலிக்க திருச்சபைமட்டில் டச்சுக்காரர் கொண்டிருந்த மனப்பான்மை பற்றிய நவமானகாரியங்களை வெளிக்குக் கொண்டுவரலாமென நம்புகின்றார். சுவாமியார் தமது புத்தகத்தை எழுதுவதற்கு டச்சுக்காரர் காலத்தைத் தெரிந்துகொண்டகாரணம் போர்த்துக்கேய, பிரித்தானிய ஆட்சிகாலங்களைப் பற்றிய சாத்திரமான சம்பவங்கள் வண. எஸ், ஜி. பெறெரு சுவாமிகளாலும், மற்றும் எழுத்தாளர்களாலும் எழுதப்பெற்று ஏலவேதானே வெளிவந்திருப்பதாகும். இலங்கைக்கு வருமுன் றோமைநகரிலும், ஒல்லாந்திலும், பெல்ஜியத்திலுமுள்ள அரசாங்கசாசனசாலைகளிலும் ஆராய்ச்சி நடத்தத் தாம் எழுதப்போகும் நூலுக்குத் தேவையான விஷயங்களைச் சேகரித்திருக்கின்றார். நுவரெலிச் சாசனசாலையிலே சமயத்துடன் சம்பந்தப்பட்ட சாசனங்களை ஏலவேதானே இவர் வகுத்துத்தொகுத்து ஒழுங்குபடுத்தியிருக்கின்றார். இலங்கை அரசாங்க சாசனங்களின் பாதுகாப்பு அதிகாரிக்கும் இது பேருதவியாயிற்று. நுவரெலியிலே தற்போது இருந்துவருகின்ற டச்சுச் சாசனங்கள் கோர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஐயாயிரம்சாசன சூசிகளையும் சவிஸ்தாரமாக வகுத்துத் தொகுத்து ஒழுங்குபடுத்திவைப்பதற்குத் துணைச்செய்யுமாறு இலங்கை அரசாங்கம் தம்மை அழைக்குமெனச் சுவாமியார் நம்புகின்றார். "மசனட் ஆண்டவரும், அரசியல் சாஸ்திரமும்" எனும் விஷயமாய்எழுதிய சிறந்தபிரபந்தத்துக்காக ஓர் தங்கமெடல் சங்மானிக்கப்பெற்ற சுவாமியவர்கள் றோமாபுரியிலுள்ள கிறகோரியாரின் சர்வகலாசாலையிலே இதிகாச பண்டிதர் எனும் பட்டம்அருளப்பெற்றவர். தமது சுயமுயற்சியாகிய இப்பணியிலே தமக்கு உதவியாய்த் தாம்பெறக்கூடிய சாசனங்களையெல்லாம் பெற்றுக் கொள்ளுமாறு இவர் கண்டி, காலி, சிலாபம், யாழ்ப்பாணம் முதலாம்இடங்களையும் தரிசிக்க எண்ணுகின்றார். ஏறக்குறைய 18 மாதத்திலே தமது நூல் வெளியிடப்படுமென இவர் நம்புகிறார்.

## குடும்பக் கலை

சென்னையில்நடந்த அகில–இந்திய குடும்பக்கலை (All-India Home Science Association) மகாநாட்டில் சென்னைப்பிரதமர் திரு. இராஜகோபாலாசாரி அவர்கள் பேசுகையில் குடும்பத்திலே பெண்கள் எவ்வளவு பொறுப்புவாய்ந்த ஸ்தானத்தை வகித்துவருகிறார்கள் என்பதைப் பின்வருமாறு விளக்கினார்.

"ஏதோ துணிகளை வெளுக்கவும், ஏதோ சமைக்கவும் தெரிந்துகொள்வதோடு குடும்பக்கலை நின்றுவிடவில்லை. இன்பத்திற்கு—குடும்ப இன்பத்திற்கு வழிகாட்டுவதே குடும்பக்கலை. இந்தக் கலையில் எத்தனையோ விஷயங்கள் அடங்கியுள்ளன. வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், நன்றாகச் சமையல்செய்யவும் படித்தால் போதாது. இல்லற வாழ்க்கையை நன்கு நடத்தக் கற்கவேண்டும். அதுவேஉண்மையான குடும்பக்கலை. குடும்பக்கலைக்குத் தாய்மார்களை அளிப்பதைவிட உபாத்தினிகளை அளிப்பதிலேயே பலபயிற்சிகள் முடிகின்றன. ஏராளமானஉபாத்தினிகளைத் தயாரிப்பதால் நல்லகுடும்பத்தை அமைத்துவிடமுடியாது.

"கணவனையும், குழந்தைகளையும் சந்தோஷமாக இருக்கச்செய்வது எப்படி என்பதை ஒருபெண் முதலில் கற்றுக்கொள்ளவேண்டும். அன்புக்கலை, சுமுகமாக நடந்துகொள்ளுங்கலை, பொறுமைக்கலை, மதுரமொழி பேசுங்கலை, கோபப்படாதிருக்கச்செய்யுங்கலைஆகியவற்றைப் பெண்களுக்குப் போதிக்கவேண்டும்.

"கல்லூரிப்பெண்களில் பெரும்பாலோருக்கு மூக்கின்மேல் கோபம்இருக்கிறது. கல்லூரியில் சுமுகமாய்இருக்கிறார்கள், ஆனால், வீட்டுக்குவந்ததும் முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடிக்கிறது. படிப்பையும், பரீட்சையையும் விட மிகஅதிகமாகப் பொறுமையைச் சோதிக்கக்கூடியது இல்லறவாழ்க்கை. இல்லற வாழ்க்கையில் சோதனைக்குமேல் சோதனையாகவரும். கோபத்தைஅடக்கவும், பழைய தமிழ்க்கவி கூறியதுபோல் அன்புகனிந்த உண்மையைப்பேசவும் தெரிந்துகொண்டால் எத்தகையநிலைமையையும் சமாளிக்கமுடியும்.

"பெண்கள் உண்மையையே பேசவேண்டும். அதிலும் நீங்கள்நேசிக்கும் ஒருவரிடம் (கணவரிடம்) உண்மையைத்தான் பேசவேண்டும்."

## சனசமூக நிலையக் கட்டிடத் திறப்புவிழா

புரட்டாசி 28-ம்நாள் பிறந்தது. புதுக்குடியிருப்பு ஆனந்தத்தில் மலர்ந்தது. ஒன்பதுமணிபோற் புதுக்குடியிருப்பை அழகுபடுத்துவதாய் 3,000 ரூபா செலவில் நவமாய்த் தோன்றிய சனசமூகநிலையக் கட்டிடமும், அதன் முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த பந்தரும் சனவெள்ளத்தால் வழிந்தது. கரகோஷங்களின்மத்தியிலே வண. கட்டளைக்குரவர் C. மரியாம்பிள்ளைசுவாமியவர்களும், பலபிரமுகர்களும் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர். வடமாகாண சனசமூகநிலையப் பரிசோதகர் திரு. கணேசபிள்ளை அவர்களால் மங்களபேரிசையோடு சனசமூகநிலையம் திறந்துவைக்கப்பட்டதும் வண. குரவர் தலைமையில்கூட்டம் நடந்தேறியது.

இப்பெருவைபவ ஆரம்பத்திலே 38 ஆண்டுகளாக இவ்வூரைத் தம்மூராகக் கொண்டு அருஞ்சேவைசெய்து இளைப்பாறியுள்ள ஆசிரியர் எஸ். ரீ. செல்லப்பா அவர்களுக்கு இவ்வூர்மக்கள் நன்றி செலுத்துமுகமாகக் கீதங்கள் பாடிச் சோபனபத்திரம்படித்துப் பொற்கிழி சங்மானித்ததும், இரண்டடிஉயரமான அவரது பிரதிமைப்படம்ஒன்று ஞாபகமாகத் திறந்துவைக்கப்பட்டது. திரு. தோமிஸ் அந்தோனிப்பிள்ளை அவர்கள் அவரதுஅருஞ்சேவைகளைப்பாராட்டிப் பேசினார். தமக்குச்செய்யப்பட்டவைகளுக்காக ஆசிரியர் நன்றிகூறினார்.

பின்னர் எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளக்கூடிய மாணவர்களின் ஆடல், பாடல், பேச்சுக்கள் நடைபெற்றன. வண. சுவாமியவர்கள் தமது தலைமைப்பேருரையில் இப்பெரும்வைபவத்திற்கு — இந்தச்சன சமூகநிலையக்கட்டிடத்திற்கு அடியிட்டவரான ஆசிரியர் V. யோசேப் அருமைநாயகம் அவர்களின் அருஞ்சேவையையும், ஊரவர்களின் ஒற்றுமையையும் குறிப்பிட்டார். சனசமூகபரிசோதகர் தமதுபேச்சில் ஊரவர்களின் ஊக்கம்போல வேறெங்கும் தாம்கண்டதில்லையென்றும், முல்லைத்தீவு, வவுனியா வட்டாரத்தில் முதல்அணியில் நிற்கும் சனசமூகநிலையம் இதுவென்றும் குறிப்பிட்டார். மீன்பிடிபகுதி இன்ஸ்பெக்றர் திரு. பிலிப்பு, வைத்தியப்பகுதியில் கடமையாற்றும் திரு. ரூசு, புதுக்குடியிருப்பு அரசினர்வைத்தியர், ஆசிரியர் D. M. யேம்ஸ், கௌரவகாரியதரிசி M. அந்தோனிப்பிள்ளைஎன்பவர்கள் சனசமூகநிலையத்தின் அவசியம், பயன்என்பனபற்றி விரிவாகஎடுத்துக் கூறினர். ஆசிரியர் P. அருளானந்தம்அவர்களால் நன்றி கூறப்பட்டதும், தேநீர்விருந்து நடைபெற்று, இரவுநடந்தேறிய "மனோகர மலர்" என்னும் டிறமாவுடன் வைபவம் இனிதுநிறைவேறியது.

— நிருபர்

—இத்தாலியிலே மாறெஸிச்சிறைச்சாலையில் இருந்துவரும்போது மறியற்காரர்ஒருவர் தான்செய்த வயலின் வாத்தியம்ஒன்றை அச்சிறைச்சாலையைப் பரிசோதனைசெய்துவருகின்ற [illegible] டின்டோ பால் டெல்லிசுவாமியார்மூலம் பரிசுத்தபாப்பரசருக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

பரிசுத்த பிதாவாகிய 12-ம் பத்திநாத பாப்பரசர்
அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபையிற் சேர்ந்த

# 50-ம் வருட தங்கயூபிலி விழா

ஐப்பசிமாதம் 12-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை
கொண்டாடப்படும்.

இவ்விழாவிற்கு வண. குருமாரையும், கன்னியாஸ்திரிமாரையும், சகலவிசுவாசிகளையும் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் ஸ்தாபகமாயிருக்கும் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபையார் அன்பாக வரவழைக்கிறார்கள்.

### கரும நிகழ்ச்சிகள்

**9-ந் திகதி வியாழன், 10-ந் திகதி வெள்ளி, 11-ந் திகதி சனி**

பி. ப. 6-15 மணிக்குத் திரிதினஆராதனையும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்.

**12-திகதி ஞாயிறு:**

மு. ப. 7-00 மணிக்குத் திவ்விய பாடற்பூசை.
" 8-15 " அங்கத்தவர்களுக்குச் சிற்றுண்டிஉபசாரணை (அர்ச். சூசையப்பர் கூட்டச்சாலையில்.)
பி. ப. 4-15 மணிக்குச் செபமாலையும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்.
பி. ப. 5-00 மணிக்குச் சென்சாள்ஸ் பாடசாலையிலே ஆசனக்கோவிற் கட்டளைக்குரவர் வண. பி. ரி. யேம்ஸ் சுவாமியவர்கள் தலைமையில் விழாக்கொண்டாட்டமுடிபு. பிரதான பேச்சாளர்: பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்கள்.

ஐப்பசிமாதம் அங்கத்தவர் பரிபூரணபலன் அடையக்கூடிய நாட்கள் :— 2, 4, 5(2), 6(2), 10, 11, 12, 19, 26(2), 30, 31. பொதுப்பாவமன்னிப்பு 4-ந் திகதி அல்லது அதிலிருந்து எட்டுநாட்களுக்கிடையில் அடையலாம்.

N. Joseph, O. M. I.
சபைக் கர்த்தர்

## ஆசிரியை தேவை

அனுராசபுரம் கன்னியர் மடத்துத் தமிழ்ப் பாடசாலைக்குத் தராதரப் பத்திரம் உள்ள ஒரு ஆசிரியை தேவை. கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பம் அனுப்புக. தமிழ் S. S. C. பரீட்சையிற் சித்தியடைந்தோர் தேவையில்லை.

T. A. J. Mathuranayagam,
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 7-10-52

## அங்கீகரிக்கப்பட்டுள்ளன

II-ம், III-ம், IV-ம், V-ம்
வகுப்புகளுக்குரிய
**மாணவர் பூமிசாஸ்திரம்**
**கதம்பமாலை**
**மாணவர் கணிதம்**

இந்நூல்கள்யாவும் வித்தியாபகுதியாரின் பாடநூற் பிரசுரசபையினரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை எமது அபிமானிகளுக்குத் தெரிவிக்கின்றோம்.

அர்ச். பிலோமினு அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனதுமகளுக்கு வந்தவாதநோய் எவ்வித வைத்தியத்தினாலும் குணப்படாதென்று நான் நினைத்திருந்தும் யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரிசுத்த பாத்திமாமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியாரின் மன்றாட்டினாலும் ஒருசின்னஒப்பறேஷனோடு சுகமாய்ப்போனது. அவவுக்குப் பூரணசுகம் கிடைக்கும்படி எனக்குவிசேஷ இரக்கம் புரிந்த பாத்திமாஇராக்கினியை மன்றாடுகிறேன்.

J. J.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

செல்வச் சகோதரங்களே!

உங்கள் பாடசாலையிலும், கோயில் வாசலிலும் ஒரு விளம்பரம் ஒட்டி யிருப்பதைக் கவனித்தீர்களா?

அதன் கருத்தென்ன? சனங்கள் எல்லோரும் நம்முடைய திருவேதத்தில் சேர்ந்திராத நாடுகள் பலஉண்டு. ஆபிரிக்கா, இந்தியா, நமது இலங்கை, சீனு, யப்பான் முதலிய பலதேசங்கள் உண்டு. இத்தேசங்களில் கத்தோலிக்கர் சொற்பம். இந்துக்கள், மகமதியர், புத்தர் முதலானேர் அதிகமாய் இருக்கிருர்கள். இவர்கள் கிறீஸ்துநாதரைப்பற்றி அறியாதவர்கள். கிறீஸ்துநாதர் சகல மனிதரையும் இரட்சித்து, எல்லோருக்காகவும் பாடு பட்டிருக்கிருர். தம்முடைய உயிரைப் பலியாக்கி யிருக்கிருர். மனிதர் மோட்சம்என்கிற நித்திய சீவியத்துக்காக உண்டாக்கப் பட்டவர்கள். மோட்சத்தை அடைய யேசுநாதருடைய போதகத்தை விசுவாசித்து, அவர் ஏற்படுத்தின ஒரே திருச்சபையில் சேர்ந்து, அவரின் கற்பனைப்படி நடந்தால் யேசுநாதருடைய மரணத்தின் பலன்களை அடைந்து மோட்சம் சேரலாம்.

இந்தச் சத்தியங்களைப் போதிக்கும்படி திருச்சபை குருமார், சந்நியாசிகளைப் பல இடங்களுக்கும் அனுப்புகிறது. இந்தக்குருமார் இப்பரிசுத்த ஊழியத்தைச் செய்து, சனங்களுக்கு மோட்ச வழியைக் காட்டுகிருர்கள். இவர்களுக்கு ஜீவனம் வேண்டும். பயணச்செலவு வேண்டும். வேதத்தில் சேருகிறவர்களுக்கு நேரிடக்கூடிய ஆபத்தில் நின்று அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் பூசை காணுவதற்குக் கோயில்கள், உங்களைப் போன்ற சிறுவர்கள் படிக்கப் பாடசாலைகள், உபாத்திமார், உபதேசிமார் வேண்டும்.

இதற்காகத்தான் பரிசுத்தபிதா வேதப்பரப்புதல் சபையை ஏற்படுத்தி அதில் கத்தோலிக்கர் எல்லோரும் சேர்ந்து, வேதம் பரம்பும்படி செபமும், ஒறுத்தலும் செய்யும்படி கேட்கிருர்.

என்ன செபம் செய்ய வேண்டும்? பூசை காணலாம்; செபமாலை ஓதலாம்; நன்மை உட்கொள்ளலாம். அதிக செபம் சொல்லாவிட்டாலும் ஒரு பரமண்டல மந்திரமும், ஒரு பிரியதத்த மந்திரமும் சொல்லி, மிஷன்நாடுகளின் பாதுகாவலரான அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரையும், அர்ச். சின்னமலரையும் மன்ருட வேண்டும்.

என்ன ஒறுத்தல் செய்ய வேண்டும்? பாடங்களைக் கிரமமாய் ஆயத்தப்படுத்துவது, வீட்டில் வேலைசெய்து கொடுப்பது, முறைப்பாடில்லாமல் சாப்பாட்டை ஏற்றுக் கொள்வது முதலியன. பிரதானமாக வேதபோதகச் செலவுக்காக ஒவ்வொருவரும் ஒருரூபா ஐம்பதுசதம் கொடுக்க வேண்டும். இது சொற்ப தொகை. ஆகையால் செபத்துடன் ஒறுத்தலைச் சேர்த்து வேத விருத்திக்காகப் பாப்பாண்டவருக்கு உதவிபுரியுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணு

## பாலர்கள் கூடி

1. எங்கும் நிறைந்தவன் அன்பு மலர்ப்பதம்
என்றும் வணங்கிடுவோம்
பொங்கும் அருட்கட லின்திரு நாமத்தைப்
போற்றிப் புகழ்ந்திடுவோம்

2. வஞ்சகம், சூது, பொய், வாதைகள் யாவையும்
வாழ்வில் ஒழித்திடுவோம்
நெஞ்சில் இரக்கமும் நேர்மையும் கொண்டுநாம்
நீதி வளர்த்திடுவோம்

3. உண்மையின் பாதையில் உண்மையின் தாசராய்
உன்னதம் பெற்றிடுவோம்.
புண்ணிய மாம்பயிர் தன்னை விளைத்திந்தப்
பூமி செழிக்கவைப்போம்

4. அன்புரு வானவன் மைந்தர்கள் நாம்எங்கும்
அன்பை நிறைத்திடுவோம்
துன்பங்கள் நேர்ந்திடும் போதினி லேமனத்
துன்பம் அகற்றிடுவோம்

5. கண்ணிலும் எம்முயிர் தன்னிலும் மேலான
கற்பினைக் காத்திடுவோம்
மண்ணினில் ஈகை அறம்படைப் போமென்றும்
மாசின்றி வாழ்ந்திடுவோம்

"ஜெயம்"

## நாக்கு

"நாக்கு கொடிய நெருப்பு"
"நாக்கு சகலஅக்கிரமங்களின் சமுத்திரம்"
"நாக்கு அடங்காதது; விஷம் நிறைந்தது"
"நாக்கு மூன்றுபக்கமுங் கூர்மையுள்ள வாள்"
"நாவினுற் சுட்டவடு மாருது"
"உன்நாவை அடக்கு"
"நா அசைய நாடசையும்"
"நினைவு குறையும்போது நா நீள்கிறது"

"ஜெயம்"

## அர்ச். பிரான்சீஸ் சவேரியார்

### III. சந்நியாச வார்த்தைப்பாடு

(முன்தொடர்ச்சி)

ஒருநாள் வாலிபன் ஒருவன் யேசுநாதரிடம் வந்து: "நான் சிறுப்பத்திலிருந்து சகல கற்பனைகளையும் அனுசரித்து வந்திருக்கிறேன்; இன்னும் செய்ய வேண்டுவதென்ன?" எனக் கேட்டான். "நீ உத்தமதனத்தை அடைய விரும்பினுல், உன்னிடம் உள்ள உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு; பின் என்னைப் பின்பற்று" என்ருர் யேசுநாதர். வாலிபன் முகவாட்டத்துடன் வீடு திரும்பினுன்.

பிரான்சீஸோவெனில் மனச் சந்தோஷத்துடன் கிறீஸ்துநாதரின் அழைப்பைப் பின்பற்றினுர்.

இஞ்ஞாசியார் வேறு ஐந்து சீஷர்களையும் தேடிக் கொண்டார். தேவமாதா பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாளில் அந்த ஏழு பேர்களும் சந்நியாச வாக்குத்தத்தஞ் செய்து தங்களைத் தேவஎசமானின் ஊழியத்துக்கு அர்ப்பணஞ் செய்வதென்று நிச்சயித்தார்கள்.

வேதசாட்சிகள் குன்று எனக் கருதப்படும் "மொண்மாத்த"ரில் ஒருசிறு கோவில் இருந்தது. குறிக்கப்பட்ட தினத்தில் ஏழுபேர்களும் இங்கு வந்தார்கள். அவர்களுள் குருவாயிருந்த முத். பீற்றர் வேபர் பூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். சற்பிரசாதம் உட்கொள்ளுமுன் நற்கருணையைக் கையிலேந்தி, மற்றவர்களைப் பார்த்து நிற்க, ஒவ்வொருவரும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றினுர்கள். கடைசியாய் வேபரும் வாக்குத்தத்தஞ்செய்தார்.

அவர்கள் செய்ததென்ன? தாங்கள் கிறீஸ்துவின் தரித்திரத்தையும், விரத்தத்துவத்தையும் பின்பற்றுவோம் என்றும், படிப்புகள் முடிந்தபின் யேசுநாதர் சீவித்த பரிசுத்த பூமிக்கு யாத்திரையாய் போவதென்றும் வாக்குச்செய்தார்கள். ஒருவருடத்திற்குள் இந்த யாத்திரையை நிறைவேற்றக் கூடாதிருந்தால், திருச்சபைத் தலைவரிடம் தங்களை ஒப்படைத்து அவர் அனுமதியின்படி ஆத்தும இரட்சணிய வேலையில் ஈடுபடுவதென்றும் வாக்குச்செய்தார்கள்.

அவர்கள் நிறைவேற்றிய வாக்குத்தத்தங்களை உறுதிப்படுத்திச் சற்பிரசாதம் உட்கொண்டார்கள்.

அன்றுதினம் யேசுசபை ஆரம்பமாயிற்று.

(தொடரும்)

## திருப்பாலர் சபை

பாடசாலை மணியடித்துச் செபஞ் சொல்லி முடிந்ததும் பிள்ளைகள் தங்கள் தங்கள் வகுப்புகளுக்குச் சென்றனர். மூன்ரும் வகுப்பிலுள்ள பிள்ளைகளைச் சிஸ்றர் மேரி மொனிக்கா கூட்டிச் சென்ருர். பிள்ளைகள் யாபேரும் ஆசனத்தில் அமர்ந்த பின்னர்,

சிஸ்றர் — பிள்ளைகளே! நேற்றுப் பூசைக்குவந்தபிள்ளைகள் எழும்புங்கள்.

எல்லோரும் எழுந்து நின்ருர்கள்.

சிஸ்றர்—எல்லோரும் வந்தீர்களோ?

'ஆம்சிஸ்றர்' என்று பிள்ளைகள் சொன்ஞர்கள்.

அப்பொழுது, "இமெல்டா கையை உயர்த்தி, அமலதாஸ் வர இல்லை சிஸ்றர்; நான் கூப்பிடக் கூப்பிட மாட்டேன் என்று கடைக்கு ஓடினுன்" என்ருள்.

சிஸ்றர்—அமலதாஸ்! என்ன பொய் சொல்லுகிருய்! நீ நேற்றுப் பூசைக்கு வரவில்லையாம்; நானும் உன்னைக் காணவில்லை.

அமலதாஸ்— வெள்ளிக் கிழமை மழையிலே நனைந்து விட்டேன் சிஸ்றர்; காய்ச்சலும், தடிமலும் இருந்தபடியால் அம்மா மறித்துப் போட்டா.

சிஸ்றர்—சரி! எல்லோரும் இருங்கள். சின்னச் சுவாமி சொன்ன பிரசங்கம் என்ன? யார் சொல்லுவீர்கள்?

எல்லோரும் கைகளை உயர்த்தினுர்கள்.

சிஸ்றர்— நீ இராசநாயகம்சொல்லு பார்ப்போம்.

இராசநாயகம்—மோட்சத்தைப் பற்றிச் சொன்ஞர்.

பிள்ளைகள் (சத்தம் வைத்து) இல்லை, இல்லை.

சிஸ்றர்— நீ ஜெயராசா சொல்லு

ஜெயராசா— சீனப் பிள்ளைகளைப் பற்றிச் சொன்ஞர்.

சிஸ்றர்—என்ன சொன்ஞர்? அருள்சீலி

அருள்சீலி—திருப்பாலர் சபையைப் பற்றிச் சொன்ஞர்.

சிஸ்றர்—திருப்பாலர் சபை என்ருல் என்ன?

அருள்சீலி—கைவிடப் பட்ட சிறுவர்களைத் தேடிக் காப்பாற்றும் சபை.

சிஸ்றர்—ஆம், எத்தனையோ பிள்ளைகள் தாய் தகப்பன் அற்ற அனுதைகளாய் இருக்கிருர்கள். சில குழந்தைகளைப் பெற்ருேர் பிறருக்கு விற்று விடுகிருர்கள். வேறுசிலர் எங்கேனும் தொலைத்து விடுகிருர்கள். இவர்களைக் காப்பாற்றி வேதத்தில் சேர்த்து வளர்த்துப் படிப்பித்து விடுவதற்கு ஏற்படுத்தப்பட்ட சபைதான் திருப்பாலர் சபை.

இராசநாயகம்—அதிலே நாங்கள் கரிசனை கொள்ள வேண்டிய அவசியமில்லையே, சிஸ்றர்.

சிஸ்றர்— ஆனுல், அப்பிள்ளைகளைக் காப்பாற்றி வேண்டிய உதவி செய்வதென்ருல் வெறுங்கை முழம் இடுமோ?

ஜெயராசா— அதற்கு நாங்கள் செய்யவேண்டியது என்ன சிஸ்றர்?

சிஸ்றர்— உங்களுடைய செபத்தினுலே சருவேசுரனுடைய உதவியைக்கேட்டு அச்சபை செய்யும் வேலையை ஆசீர்வதிக்கும்படி மன்ருடலாம். அந்தச் சபைக்குத் தருமம் புரியலாம்.

இராசநாயகம்—கனக்கக் கொடுக்க வேணுமோ சிஸ்றர்?

சிஸ்றர்— உங்களால் இயன்றதைக் கொடுங்கள். உங்கள் சிறுசெலவிற்குத் தரும் பணத்திலிருந்து கொஞ்சங் கொடுங்கள். அங்கத்தவராக விரும்பினுல் 50 சதம் கொடுக்க வேண்டும்

ஜெயராசா— அவ்வளவு தானு! நான் நாளைக்குச்சேருகிறேன், சிஸ்றர்.

சிஸ்றர் நானும், நானும், நானும் என்று வகுப்பு மாணவர் எல்லோரும் கை உயர்த்தினுர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

1. தற்போது வத்திக்கான் இராச்சிய மந்திரியாராய் இருந்துவருகிறவர் யார்?

எவருமில்லை. அப்பதவியை வகித்திருந்த கருதினுல் மக்லியோனே ஆண்டவர் 1944-ம் ஆண்டு காலஞ்சென்றுர். அவரிடமாக எவருமே இதுவரை நியமிக்கப்படவில்லை. பரிசுத்தபிதாவே அவரது கடமைகளையெல்லாம் மொன்ஞ். மொன்ரினி, மொன்ஞ். ரார்டினிஎனும் இரு குருசிரேஷ்டர்களின் துணையோடு இன்னமும் பார்த்துவருகின்றுர். 11-ம் பத்திநாத பாப்பானவரின்கீழ் பரிசுத்தபிதா நான்குவருடகாலம் வத்திக்கான் இராச்சியமந்திரியாராய் இருந்துவந்தார்.

2. கலியாணப்பூசை என்பது என்ன?

ஓர்மணவாளன், மணவாளிக்கென்று ஏற்ற செபங்களுடனும், அனுபவ போதனைகளுடனும்கூடிய ஓர்விசேஷ நேர்த்திக்கடன் பூசையாகும். ஆனுல், மேற்றிராணியாண்டவரின் சம்மதம் பெற்றல்லாது மற்றப்படி ஆகமனகாலத்தின் முதலாவது ஞாயிறுதொடக்கம் நத்தால்திருநாள் முடிகிறவரையிலும், விபூதித்திருநாள்தொடக்கம் பாஸ்கு ஞாயிறுமுடிகிறவரையிலும் இதனை நிறைவேற்றமுடியாது.

3. சைமன்என்ற பெயர்கொண்ட வேதசாட்சிகளாய் முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளப்பெற்ற யப்பானியர்கள் எத்தனைபேர்இருக்கின்றுர்கள்?

இருவர்இருக்கிறுர்கள். இவர்களில் ஒருவர், முத் சைமன் குளோற்றுஎன்பவர். இவர் 60 வயதுடையவராய் இருந்தபோது தமது மனைவியாருடனும், மூன்று துணைவர்களுடனும் சிலுவையில்அறைந்து கொல்லப்பட்டார். முத். சைமன் யெம்போஎன்பவரே மற்றையயப்பானிய வேதசாட்சியாவர்.

4. அப்போஸ்தலரான அர்ச். பேதுருவானவரின் முதல்நாமம் என்ன?

சைமன் அதாவது சீமோன்என்பது. ஆனுல், நமது திவ்வியஇரட்சகர் அவரதுநாமத்தைப் பேதுருவென மாற்றிவிட்டார்.

5. பரிசுத்த ஸ்தானத்துக்கும், பாகிஸ்தானுக்குமிடையே இராசிய உறவு எப்போது ஏற்படலாயிற்று?

சென்றவருடம் ஐப்பசிமாதத்தில் ஏற்படலாயிற்று. இதுவரை பரிசுத்த ஸ்தானம் தனதுபிரதிநிதியாகப் பாகிஸ்தானிலே ஓர்அப்போஸ்தலிக்க ஸ்தாறுபதியாக ஓர்அதிமேற்றிராணியாரைக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தான் தனதுபிரதிநிதியைப் பரிசுத்தஸ்தானத்தினிடமாக நியமித்ததும் இந்த மேற்றிராணியார் ஓர்ஸ்தானீகர்பதவிக்கு உயர்த்தப்படுவாரெனத் தெரியவருகிறது.

6. சர்வதேச நீலச்சேனை என்பது என்ன?

இது பாத்திமாநாயகியின் பக்தியைப் பரப்பிவருகின்ற ஓர்ஞானப்படையணியாகும். இதனைஅடியிட்டவர் அமெரிக்க ஐக்கியதேச நியூஜேர்ஸியிலே பிளெய்ன்பீல்ட் எனுமிடத்தைச் சேர்ந்த வண. ஹறல்ட் கொல்கன் சுவாமியவர்களே. இந்தப்படையணி அமெரிக்கநாடுகளிலும், பிரித்தானியிலும், மேற்குஐரோப்பியநாடுகளிலும் பரந்திருக்கிறது. இதன் தலைமைஸ்தானத்தைப் பாத்திமாபதியில் நிறுவுவதற்கான ஆயத்தம்நடக்கின்றது.

7. கிறகோரியாரின்தண்ணீர் என்பதுயாது?

சாம்பர், உப்பு, உவைன் ஆதியவற்றுடன் கலக்கப்பட்டதண்ணீரே. இது ஆலயதிருஅபிஷேகத்துக்கு உபயோகிக்கப்படுகிறது.

## நாளு சங்கதிகள்

—பல்வேறு கன்னிகாசபைகளின் சிரேஷ்டதாய்மார் ரோமாபுரியிற்கூடிய மகாநாட்டிலே, அந்நகரில் கன்னியாஸ்திரீமாரின் உயர்தரகல்விக்கென ஓர் சர்வகலாசாலையை அமைப்பதுபற்றிக் கலந்துஆலோசித்திருக்கின்றனர். அங்ஙனம் ஸ்தாபிக்கப்படுமிடத்து அதுவே ரோமைநகரில் கன்னியாஸ்திரீமாருக்கான ஒரேயொருசர்வகலாசாலையாய் இருந்துவரும்.

—சீனுவிலே கம்யூனிஸ்தஅதிகாரிகள் சிலகாலம் சிறைச்சாலையில் அடைத்துவைத்திருந்த குவெய்ற்றே நகரின் குயின்ரானில்லா மேற்றிராணியாரும், ஹாங்சங்நகரின் டீமக்கி மேற்றிராணியாரும் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டுச் சிலதினங்களின் முன் ஹொங்கோங்போய்ச் சேர்ந்திருக்கிறுர்கள். இவர்கள்இருவரும் இத்தாலியராவர்.

—சீனுவிலே பிறதேசமேற்றிராணிமார்களாய்ப் 15 பேரும், குருமாராய்த் 94 பேரும், கன்னியாஸ்திரீமாராய்ப் 12 பேரும் பிறதர்மாராய் ஐந்துபேரும் சிறைச்சாலைகளில் இருந்துவருவதாக அறிவிக்கப்படுகிறது. சமீபத்திலே வேறும்எட்டுக்குருமார் சீனுவிலிருந்து வெளியேற்றப்பட்டு ஹொங்கோங்கைச் சேர்ந்திருக்கிறுர்கள்.

—விசுவாசப் பரப்புதற்சபைத் திருச்சங்கத்தின்தலைவரான கருதினுல் புமசோனி பையொந்தி ஆண்டவர் தமது 80-வது பிறந்தபெருநாளைச் சென்றமாசத்திலே கண்டுகளித்திருக்கின்றுர். இவர் 1933-ம் ஆண்டுமுதல் ஓர்கருதினுலாக இருந்துவருகின்றுர்.

—அமெரிக்க ஐக்கியதேச வாஷிங்ரன் தலைநகர வட்டாரத்தில் அடங்கியுள்ள 15 ஆஸ்பத்திரிகளிலே 3 தேசங்களைச் சேர்ந்த 78 டக்றர்மார் தற்போது பயிற்சிபெற்று வருகின்றுர்கள். இவர்களுடைய பயிற்சிக்காலம் ஒன்றுமுதல் மூன்று வருடங்கள் வரையில் நீடித்துள்ளது. பயிற்சி முடிந்ததும் இவர்கள் தத்தம் தேசங்களுக்குச் சென்று வைத்தியத்தொண்டு ஆற்றிவருவார்கள்.

—பியரைச் சிறு மாத்திரைகளாக மாற்றியமைக்கும் நவீனமுறை ஒன்றைப் பெல்ஜியதேச டக்றர் றெுபேட் மவுட்டன்எனும் 35 வயதுடைய இரசாயனசாஸ்திரி கண்டுபிடித்திருக்கின்றுர். இந்த மாத்திரைகளைக் கரைத்துக்குடிக்குமிடத்து சிறந்த பியராக இருக்கிறதென்று பரிசோதனையில் கண்டறியப்பட்டிருக்கிறது.

—உலகில் அமெரிக்க ஐக்கியதேசத்திலேயே அளவுக்கு மிஞ்சிய தங்கம் இருக்கிறது. அங்கும் மிக அதிகமான தங்கச் சேமிப்புச்சாலை போட்நொக்ஸ்எனுமிடத்தில் உள்ளது. அதில் 1,200 கோடிமுதல் 1,500 கோடி வரையில் பெறுமதியான தங்கம் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

—இவ்வருடம் பங்குனிமாதஇறுதியிலே பிரித்தானிய அரசுக்கு இருந்த மொத்தக்கடன் 2,591 கோடியே 4 லட்சத்து 50 ஆயிரத்து 873 பவுண். இந்தக்கடன் சென்ற வருடத்திலும் 3 கோடியே 11 லட்சத்து 13 ஆயிரத்து 668 பவுணுல் குறைந்துள்ளது.

—பிரித்தானியஅரசு 1945-ம்ஆண்டின் பணஉடன்படிக்கைப்படி அமெரிக்கவரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன் 158 கோடியே 97 ஆயிரத்து 455 பவுண். இதைவிட வேறும் 12 கோடி பவுணுக்குமேலும் அதற்குக் கடன்கொடுக்க வேண்டியிருக்கிறது.

---

8. பாப்பரசரின் சுவிஸ்காவற்படை எப்போதுஆக்கப்பட்டது?

1505-ம் ஆண்டு. இது 104 ஆடவரையும், [illegible] யுள்ளது.

## பாடசாலைத் திறப்புவிழா

சமீபத்திலே சிரேஷ்டபாடசாலையின் தரத்திற்கு உயர்த்தப்பட்ட நாக்களிக் கத்தோலிக்க தமிழ்க்கலவன்பாடசாலையின் புதியகட்டிடம் முகாமைஅதிகாரிகளின் முயற்சியினுலே சிறப்பாக முடிக்கப்பட்டு 9-9-52 செவ்வாய்க்கிழமை சலாபப்பகுதிக் கத்தோலிக்க பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் அதிவண. மைக்கேல் பெறேறு சுவாமியாரால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு. எம். ரீ. லெம்பட் அவர்களின் வரவேற்புரைக்குப்பின் மாணவிகள் கீதம்பாடி, மாலைசூட்டிச் சுவாமியாரை வரவேற்றனர். பின்னர் ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளையவர்கள் சலாபமேற்றிராணி யாண்டவருக்கும், பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர்க்கும், பங்குக்குருவானவர்க்கும் புதியபாடசாலையை அழகியமுறையில் கட்டியுதவியமைக்காக நன்றித்துதிகூறிக் கல்வியின் முக்கியத்துவம்பற்றி இனியதோர் சொற்பொழிவாற்றினர். அதிவண. மைக்கல் பெறேறுசுவாமியார் "பாடசாலையைப் பண்படுத்தும்முறை" பற்றியும், புத்தளக்கச்சேரி உதவிஅதிகாரி திரு. இராசையாஅவர்களும், புத்தள வட்டார வித்தியாதரிசி திரு. கனகசபாபதிஅவர்களும் "பாடசாலை முன்னேற்றம்" "பெற்றுரின் பிற்போக்கு" என்பனபற்றியும் அரியசொற்பொழிவுகள் நிகழ்த்தியபின் பகுதிப்பங்குக்குரவர் வண. எஸ். விசுவாசம்சுவாமியவர்கள் கட்டிடம் சம்பந்தமாகத் தமக்குஉதவிசெய்த பெரியார்க்கும், மற்றையோர்க்கும், சமுகமளித்தகுருப்பிரசாதிகள், ஏனையஅதிகாரிகட்கும் வந்தனோபசாரங்கூறினர். ஈற்றில் மாணவிகளின் அபிநயவாழ்த்துப் பாடல்களுடனும், சிற்றுண்டி உபசாரணைகளுடனும் திறப்புவிழா சிறப்பாக முடிவடைந்தது.

— நிருபர்

## வாசிகசாலைத் திறப்புவிழா

பேசாலை, பாத்திமாஆண்பாடசாலைப் புதியவாசிகசாலைத் திறப்புவிழா 18-9-52 வியாழன்அன்று நடைபெற்றது. அதனைத் திறந்துவைப்பதற்காக மாணவரும், ஆசிரியரும் பேசாலைக் கட்டளைக்குரவர் வண. A. லெபோன் சுவாமியவர்களை அவர்மனையிலிருந்து அழைத்துவந்தனர். பாடசாலைமண்டபத்திலே ஆசிரியர் ஞா. அந்தோனிப்பிள்ளை சுவாமியாரை மாலையிட்டு வரவேற்க, பாலியர்கள் இனிமையான வரவேற்புப்பாக்கள் படித்தனர். செல்வன் ச. மாட்டின் டயஸ் "பாடசாலையும், அதில் வாசிகசாலையின் முக்கியத்துவமும்" என்னும் பொருள்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் ச. மனுவேற்பிள்ளை பேசியபோது, பாடசாலையின் தீவிரவளர்ச்சிக்காகக் கட்டளைக்குரவரும், தலைமையாசிரியர் அ. சிங்கராயர்அவர்களும் செய்த, செய்கின்ற சேவையையும், வாசிகசாலையை மாணவர் பயன்படுத்தவேண்டிய அவசியத்தையும் எடுத்துக்கூறி வாசிகசாலையைத் திறந்துவைக்கும்படியாகச் சுவாமியாரைக் கேட்டுக்கொண்டார். சுவாமியார்பேசுகையில், "ஓய்வுநேரங்களை மாணவர் விளையாட்டிலும், வாசிப்பிலும்செலவிட்டுப் பயன்பெறவேண்டும்; படங்களைப் பார்ப்பதற்காகமட்டும் வாசிகசாலையின் புத்தகம், பத்திரிகைகளை உபயோகியாது, வாசித்து அவற்றிலிருக்கும் சாரத்தை எடுத்துக் கொள்வதுடன் பாடசாலையில்நடக்கும் "மாணவர் கலாசங்க"த்திலும் அந்தந்த விஷயங்கள்பற்றி மாணவர் சொற்பொழிவுகள் நிகழ்த்தவேண்டும்" என்று கூறிப் பாடசாலையிலே ஆசிரியர்களின் முயற்சியை வெகுவாகப்பாராட்டிக் கரகோஷங்கள்மத்தியிலே புதியவாசிகசாலையைத் திறந்துவைத்தார்.

— நிருபர்


நமது அச்சியந்திரசாலைப் புத்தகசாலையில்

## விற்பனைக்கிருக்கும் கத்தோலிக்க புத்தகங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| சின்னக்குறிப்பிடம் ... | 15 |
| பெரியகுறிப்பிடம் ... | 30 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 25 |
| உறுதிப்பூசுதற்குறிப்பிடம் ... | 05 |
| ஞானோபதேசபாடத்திட்டம் ... | 90 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரணசெபங்கள் ... | 2-00 |
| திவ்வியபூசையின் சாதாரணசெபங்கள் ... | 60 |
| மோட்சபாதை (கலிக்கோ) ... | 5-00 |
| " " (தோல்) ... | 7-50 |
| முத்தித் திறவுகோல் (தோல்)... | 3-50 |
| ,, ,, (கலிக்கோ) ... | 2-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| திவ்வியபூசைப்பலியின் பேரில் தியானங்கள் ... | 1-00 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிஷேங்களின் ஒப்புமை ... | 2-95 |
| பசாம் ... ... | 1-50 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| சத்தியவேத ஞானக்கீர்த்தனங்கள் ... | 75 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் 2-ம்பகுதிநோட்டுகளுடன் (அச்சில்) | |
| நவதின உற்சவம் ... | 75 |
| சற்பிரசாத அன்பன் ... | 30 |
| தருமஅப்பம் ... | 1-00 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை ... | 50 |
| பத்திமாமாதாவும் செபமாலையும் ... | 25 |
| அவர்கள் மூன்றுசிறுவர்கள் (பத்திமா) ... | 2-50 |
| மகாமனந்திரும்புதல் இயக்கப்பிரசங்கங்கள் ... | 1-00 |
| ஞானவொடுக்க பிரசங்கங்கள் (அச்சில்) ... | |
| திவ்வியபூசைமகத்துவம் ... | 2-50 |
| பூசைஉதவி மந்திரம் | 40 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| (Part II) ... | 90 |
| (Part III) (அச்சில்) ... | |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ... | 70 |
| பத்திச்சபைகள் ... | 20 |
| ஆத்துமதரிசனம் ... | 20 |
| சத்தியவேத தர்ப்பணம் (Part I) போதககாண்டம் ... | 2-50 |
| மன்னார் வேதசாட்சிகள் ... | 1-00 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக்கன்னிகைசரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவியசரித்திரம் ... | 40 |
| நானே குற்றவாளி ... | 1-00 |
| வேதாகம வாசிப்பு ... | 90 |

விலாசம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Mal. Eng. No. 20.

## மோட்டார்ரதப் பயணமும் நுளம்புகளும்

உங்கள்விடுமுறை நாட்களிலே நீங்கள்தினமும் நூற்றுக்கணக்கானமைல் பிரயாணஞ்செய்து, கலன்கணக்கிலே பெற்ரோலைப் பாவிக்கும்போது, ஆங்காங்கு பலவிதகாட்சிகளையும்பார்த்து அதிசயிப்பதில் அத்துணை அதிகமான நேரத்தை நீங்கள்செலவிடலாம். ஆனால், மறுபடியும் அவைகளைச் சிந்திப்பதற்கான சந்தர்ப்பத்தைச் சொற்பமாகவே கொண்டிருக்கிறீர்கள். தங்கள்உத்தியோகநிமித்தமாய்த் தினமும் நீண்டதூரம் தார்ப்பாதையிலே பிரயாணஞ்செய்யக் கடமைப்பட்டிருப்பவர்கள் அதிகம் ஆழ்ந்துசிந்திப்பதற்கு அருமையாகவே நேரங்கண்டு கொள்ளுகின்றார்கள்.

உங்கள் மோட்டார்ரதப்பிரயாணத்தை நுளம்புகள் நிறுத்திவிடக்கூடுமென்றகருத்து உங்களுக்கு ஒருபோதுமே உண்டாகவில்லையென்பது முற்றிலும் சம்பவிக்கத்தக்கதே. இதுசதுப்பு நிலங்களில் அவைகள் உங்களைச் சருவக்கூடுமென்பதையிட்டல்ல, ஆனால், சாதாரணமனுஷர் இனிவாங்கமுடியாதென்ற அவ்வளவுநிலைமைக்கு ரையர்களின்விலையை அவைகள் உயர்த்திவிடக்கூடியனவாய் இருப்பதையிட்டேயாம்.

இது எவ்வாறு சம்பவிக்கக்கூடும்? ஈரமும், உஷ்ணமுமான நாடுகளிலே, றப்பர்த்தோட்டம் நுளம்புகள் பூரணமாகப் பலுகிப்பெருகுவதற்கான நிலங்களை அமைத்துவிடுகின்றது. அவற்றிலே மிகவும்எண்ணிறந்த இனங்களில் ஒன்று, அனோபிலெஸ்என்பது. இந்த நுளம்பு மலேரியாவைப் பரவச்செய்கின்றது. அதன்பயனாக றப்பர்த்தோட்டங்களின் மனேஜர்மார் மலேரியாவுடன் இடையறாதுபோராடவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். அன்றேல் சொற்பகாலத்தில் அவர்கள் தொடங்கிய கருமங்கள் பாழடைந்துவிடும். மோட்டார்க்கார்களைப் பெருந்தொகையாக உற்பத்திசெய்கிறவர்கள் தங்களுக்குச்சொந்தமாகப் பெரிய றப்பர்த்தோட்டங்களை உண்டுபண்ணுவதாலே தங்களுக்குத்தேவைப்படும் றப்பரை நியதியாகப்பெற்றுக்கொள்ள முயன்றிருக்கிறார்கள். உதாரணமாக, போட்அவர்கள் பிறேசில்நாட்டிலே றப்பர்த்தோட்டங்களைக் கொண்டிருக்கிறார். பயர்ஸ்ரோன் மேற்குஆபிரிக்காவிலே (லைபீரியா) பெரியறப்பர்த்தோட்டங்களைக் கொண்டிருக்கிறார்.

இந்தஉண்மைகளிலிருந்து இவ்வகையான முக்கியகருமங்களிலே மலேரியாவைஎதிர்த்துப் போராடவேண்டியதன் பெரும்அவசியத்தை நாம் கண்டுகொள்ளுகிறோம். அதனால் குயினைன்வாங்குவதிலும், மற்றும்நடவடிக்கைகளைக் கையாளுவதிலும் செலவிடும்பணமானது சிறந்ததோர் முதலீடென்பது நன்றாக விளங்கக்கிடக்கிறது.

தினமும் 6 கிறெய்ன் குயினைன் பாவிப்பதாலே மலேரியா தடுக்கப்படமுடியும்என்று முந்திய சர்வதேசசங்கத்தின் மலேரியாக்கம்மிஷன் கூறுகின்றது. அயனாந்ததேசங்களிலுள்ள றப்பர்த்தோட்டங்களில் மாத்திரமல்ல, சகலதோட்டங்களிலுமே தொழிலாளிகளுக்குச் சிறுகக்குயினைனைக் கொடுப்பதானது மிகப்பெரும்நஷ்டம் உண்டாகாமற் தடுக்கக்கூடியதாய் இருப்பதாலே இந்தமருந்துக்கு ஏற்படுஞ் செலவு மிகமிகச்சொற்பமானதாகும்.

மலேரியாகாணும்போது அதற்குச் சிகிச்சையாக 5 முதல் 7 தினங்களுக்குப் 15 முதல் 20 கிறெய்ன்குயினைன் பாவித்துவரவேண்டுமென்று கம்மிஷன் சிபாரிசுசெய்கின்றது. சிகிச்சையின் பின் குயினைன்பாவிப்பதை நிறுத்திவிடவேண்டும்.

## ORDER NISI

### Declaring Will Proved

IN THE DISTRICT COURT OF JAFFNA

1. Joseph T. Thurairatnam and wife
2. Hariet Theresa Mary both of Sirampiady, Jaffna.

Petitioners

Testamentary Jurisdiction } No. 1396

Vs.

1. Francis Rajaratnam Bastiampillai
2. John Bastiampillai of Clock Tower Road, Jaffna.
3. Pius Bastiampillai of Nelliady.
4. James Bastiampillai of Pandianthalvu.
5. Noel Bastiampillai of Martyn Road, Jaffna.
6. Henry Bastiampillai of Kagamma.
7. Francis Bastiampillai of Clock Tower Road, Jaffna.
8. Paul Bastiampillai of do.

Respondents

In the matter of the Estate of the late Mary Rose Bastiampillai widow of Joseph Bastiampillai deceased of Clock Tower Road, Jaffna.

This matter coming on for disposal before William Gunam Spencer Esquire, Additional District Judge, Jaffna, on the 13th day of February 1952 in the presence of Mr. V. Sivasubramaniam, Proctor, on the part of the Petitioners and the affidavit of the Petitioner dated 17th December 1951 having been read :—

It is ordered that the Will of Mary Rose Bastiampillai widow of Joseph Bastiampillai deceased, bearing No. 222 and dated 6th November 1949 and attested by K. Nadarajah, Notary Public be and the same is hereby declared proved unless the respondents or others interested shall on or before the 28th day of March 1952 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further declared that the said Hariet Theresa Mary wife of J. T. Thurairatnam, the 2nd Petitioner is hereby declared the executrix in the absence of the 1st Respondent not applying for probate who is named as executor in the said Will, and that she is hereby entitled to have probate of the same issued to her accordingly unless the respondents or others shall on or before the 28th day of March, 1952 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 13th day of February 1952

Sgd. K. D. de SILVA,
District Judge.

Drawn by
Sgd. V. Sivasubramaniam,
Proctor for Petitioners.

28-3-52
Time to shew cause is extended and re-issued for 16-5-52.
Sgd. K. D. de Silva.
District Judge.

16-5-52
Time to shew cause is extended and re-issued for 14-7-52.
Sgd. K. D. de Silva,
District Judge.

14-7-52
Time to shew cause is extended and re-issued for 12-9-52.
Sgd. K. D. de Silva,
District Judge.

12-9 52
Time to shew cause is extended and re-issued for 31-10-52.
Sgd. K. D. de Silva.
District Judge.

## ORDER NISI

### Granting Letters of Administration

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Intestate estate and effects of the late Soosaipillai Chelliah Bastian of Lochnogar Estate. Matale.

Deceased

Testamentary Jurisdiction } No. 1500 T.

Francisca widow of S. C. Bastian of No. 10, New Road, Koiyathoddam

Petitioner

Vs.

1. Joseph Emmanuel Bastian of Koiyathoddam presently of "King's Court," Maradana.
2. Mary Theresa Bastian wife of
3. Paulupillai Emmanuel Antony of Koiyathoddam Jaffna.

Respondents

This matter coming on for disposal before William Gunam Spencer Esq., Additional District Judge, Jaffna, on the 2nd day of September 1952 in the presence of Mr. V. Sivasubramaniam, Proctor, on the part of the Petitioner and the affidavit of the abovenamed Petitioner dated 12th July 1952 having been read:

It is declared that the said Petitioner abovenamed as lawful widow of the deceased is entitled to have Letters of Administration and the same be issued to her accordingly unless the Respondents or others shall on or before the 29th day of September 1952 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 2nd day of September 1952.

Sgd. K. D. de SILVA,
District Judge, Jaffna.

Drawn by
Sgd. V. Sivasubramaniam,
Proctor for Petitioner.

Time to shew cause extended to 14-11-52.
Sgd. K. D. de Silva.
District Judge, Jaffna.

## யாழ்ப்பாண நகரசபை

பின்னாற்காணப்படும் சந்தைகளிலும், காலையிலும், பஸ்ஸ்ராண்டிலும் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரங்கள்.

பின்னாற்குறிக்கப்படும் சந்தைகளிலும், காலையிலும், பஸ்ஸ்ராண்டிலும் 1953-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதி தொடக்கம் ஒருவருடகாலத்துக்கு வாடகைப்பணம் அறவிடும் உரிமையைக் குத்தகையாகப்பெறுவதற்கான முத்திரையிட்ட கேள்விப்பத்திரங்கள் அனுப்புமாறு யாழ்ப்பாணநகரசபைக் கம்மிஷனர் அழைக்கின்றார்.

கேள்விப்பத்திரங்கள் நகரசபைக் கந்தோரில் கிடைக்கும் குறித்தமாதிரிப்பத்திரங்களில் கேட்டு அனுப்பப்படவேண்டும்.

மாதிரிக் கேள்விப்பத்திரங்களை இந்தக்கந்தோரிலே பின்வருமாறு பிணைப் பணங்கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

(1) கீழேகாணப்படும் 1-ம் 2-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 500.

(2) கீழேகாணப்படும் 3-ம் 4-ம் 5-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 250.

(3) 6-ம் 7-ம் 8-ம் 9-ம் 10-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 50.

மாதிரிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படுமுன் 1, 2, 3, 4, 5-ம் குத்தகைகள்விஷயமாய் முத்திரைச் செலவுக்கும், பிணைஉறுதி எழுதும் நொத்தாரிஸ்செலவுக்குமாக மேலும் ரூபா 150 பிணைப்பணம்கட்டப்படவேண்டும்.

மாதிரிக் கேள்விப்பத்திரங்கள் 1952-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 25-ந் திகதி சனிக்கிழமைமுற்பகல் 11 மணிவரையும் வழங்கப்படும்.

சகலகேள்விப்பத்திரங்களும் மேல் உறையின் மேற்பக்கமாக இடது கோணத்திலே "சந்தைகளின் குத்தகைக் கேள்விப்பத்திரம்" எனத் தெரிவித்து, யாழ்ப்பாணநகரசபைக் கம்மிஷனருக்கு விலாசமிட்டு, 1952-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 29-ந் திகதி புதன்கிழமைமத்தியானம் 12 மணிக்குப்பிந்தாது இந்தக்கந்தோர்வந்து சேரவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அதேநாளிற்தானே (29-10-52) பிற்பகல் 12-30 மணிக்கு இந்தக்கந்தோரில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமாயிருக்குமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

ஒவ்வோர் சந்தைக்கும் அல்லது காலைக்கும், பஸ்ஸ்ராண்டுக்கும் வேறுவேறான கேள்விகள் கேட்கப்படவேண்டும்.

சபையால்தெரியப்பட்ட கேள்விக்காரர் அவ்வாறுதெரியப்பட்டு ஐந்து நாளைக்குள் தமதுகுத்தகைக் கேள்வித்தொகையின் மூன்றில்ஒருபங்கைக் கட்டவேண்டியவர். மீதித்தொகை (6, 7, 8, 9, 10-ம் குத்தகைகள்விஷயமாய் முழுக்குத்தகையையும் அடக்கியிருக்கும்படி "குத்தகைகள்" 1952-ம் ஆண்டு மார்கழி 1-ந் திகதியன்று, அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும்.) 1-ம் 2-ம் 3-ம் 4-ம் 5-ம் குத்தகைகள்விஷயமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் 1952-ம் ஆண்டு மார்கழி 1-ந் திகதிக்குமுன்னதாகத் தாம்முன்னர்கட்டிய ரூபா 150 உடன்சேர்த்து முத்திரைகள் கொடுத்தும், நொத்தாரிஸ்சலாரை இறுத்தும் உண்மையானகாணியை ஈடாகக்கொடுத்து நொத்தாரிஸ்மூலம் பிணைஉறுதி முடித்துக்கொள்ளவேண்டும். மீதித்தொகை எட்டுச்சமபங்குகளாகப்பிரித்து ஒவ்வோர்மாதமும் 15-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும். இதிலே முதற்கட்டுப்பணம் குத்தகை நிபந்தனைகளுக்கிணங்க 1953-ம்ஆண்டு தைமாதம் 15-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும். குத்தகைநிபந்தனைப் பத்திரங்கள் பார்வையிடுமாறு இந்தக்கந்தோரிலே கிடைக்கும்.

எந்தக்கேள்விக்காரரும் கேட்கப்படுந்தொகையைக்கட்டவும், மேற்கூறியபடி நொத்தாரிஸ்மூலம் பிணைஉறுதிமுடிக்கவும் தவறுமிடத்து, அவரதுபிணைப்பணம் பறிமுதலாக்கப்படும். குத்தகை திரும்பவிற்கப்படும்.

எல்லாக்கேள்விகளையும், அல்லது எந்த ஒருகேள்வியையும் நியாயம்காட்டாமலே தள்ளிவிடச் சபைக்குஉரிமையுண்டு.

வேறுவிபரங்களை இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

### சந்தைகள் வருமாறு

1. பெரியகடை காய்கனி மரக்கறிச் சந்தை (இருபிரதான நிரந்தரசந்தைக் கட்டிடங்களும், சபையால்அமைக்கப்பட்ட பலசரக்குக்கடையும், சபையின் அனுமதியோடு ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகளும், தகரக்கொட்டில்களும், தெருவுக்கும் தகரக்கொட்டில்களுக்கும் இடையிலுள்ள வெளியிடமும், அரசாங்க விற்பனைவசதிப்பகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள வெளியிடமும் புறநீங்கலாக)
2. பெரியகடையிலே பஸ்ஸ்ராண்ட் உட்படவுள்ள காலை.
3. பெரியகடை மீன்கடை (அரசாங்கத்தாலே காணி எடுத்துக்கொள்ளப்படுகிறவரையில் பண்ணைத் துறையில் மீன்விற்கும் இடமும்உட்பட)
4. சின்னக்கடை (இறைச்சிக் கடைகள்எல்லாம் புறநீங்கலாக)
5. செங்குந்தர்சந்தை இரண்டு அறைகள்உட்பட. ஆனால், சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக் கொட்டில் புறநீங்கலாக.
6. அரியாலைச்சந்தை (அறைபுறநீங்கலாக)
7. முத்திரைச்சந்தை (ஓடுகடைநீங்கலாக)
8. கொழும்புத்துறைச்சந்தை
9. நாவாந்துறைச்சந்தை
10. பாஷையூர்ச்சந்தை

K. Shanmugam
கம்மிஷனர்
யாழ்ப்பாண நகரசபை

நகரசபைக்கந்தோர்
யாழ்ப்பாணம், 3-10-52.

## சண்டைப் பீதியா? சமாதான பீதியா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொன்றும் தனக்குச்செய்ததாக ஒவ்வொரு ஹங்கேரியனும் எண்ணுகிறான். இவைகள் போதாவென்று கம்யூனிஸம் செய்த கடைசி அக்கிரமத்தால் ஹங்கேரியின் இரத்தம் கொதிக்கிறது. பைத்தியகாரர்களைப்போல அவர்கள்அலைகிறார்கள். நல்லசுகமுள்ள குழந்தைகளைச் சுகவீனர்கள்என்று தாய்மாரிடமிருந்து பிரித்தனர். செஞ்சாலைகளில் அவர்களைக் கொண்டுபோய்வைத்துச் செங்கற்பனைகளைப் படிப்பித்துக் கொடுக்கின்றனர், செஞ்சேனையின் தூண்களாய் நிற்பதற்காக.

(தொடரும்)

Printed and Published for the Proprietor by Bastiampillai Santiagoepillai residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 9-1952.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org